*கவனிக்க.- 2008.08.22 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1565 - 2008 අගෝස්තු 29 වැනි සිකුරාදා - 2008.08.29

*1565 ஆம் இலக்கம் - 2008 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 918 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 923 |


***வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான***

## முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள்* ***வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.*** *வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏலவிற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும், பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.*

*வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்*** *இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2008, செத்தெம்பர் 05 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2008, ஓகத்து 22 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.*

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2008 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான “புதிய சேர்வாளர்கள்” ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத்தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந்திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந்தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந்தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

### விவாக, பிறப்பு, இறப்பு பதிவு செய்கின்ற பதிவாளர் பதவி - அநுராதபுரம் மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும், குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும், பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாயும் இருத்தல் வேண்டும்.

3. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

4. விண்ணப்பதாரரின் வயது 21 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 65 வருடங்களுக்கு மேற்படாதும் இருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரர் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

6. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விவரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

7. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) காரியாலயத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

8. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2008, புரட்டாசி மாதம் 29 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்திரமுல்லை,
2008, யூலை 30.

### அட்டவணை

### அனுராதபுர மாவட்டம்

| மாவட்டம் | பிரதேச செயலக பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| 1. அனுராதபுரம் | தம்புத்தேகம | முதுன்கொடை பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் தம்புத்தேகம பிரிவு விவாக (கண்டி/பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம் மாவட்ட செயலகம் அனுராதபுரம். |
| 2. அனுராதபுரம் | தம்புத்தேகம | பகலகம பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் தம்புத்தேகம பிரிவு விவாக (கண்டி/பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம் மாவட்ட செயலகம் அனுராதபுரம். |
| 3. அனுராதபுரம் | பலாகல | மேற்கு கிரலவ கோறளை பிரிவு பிறப்பு, இறப்பு மற்றும் கலாகம் பலாத பிரிவு விவாக (கண்டி/பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம் மாவட்ட செயலகம் அனுராதபுரம். |
| 4. அனுராதபுரம் | திரப்பனே | தெற்கு உலகல்ல கோறளை பிரிவு பிறப்பு, இறப்பு மற்றும் குறுளுபலாத பிரிவு விவாக (கண்டி/பொது) | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம் மாவட்ட செயலகம் |

| மாவட்டம் | பிரதேச செயலக பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| 5. அனுராதபுரம் | கலென்பிந்துனுவெவ | பதிவாளர் பதவி சீலலீபுர பிரிவு பிறப்பு, இறப்பு மற்றும் குருளுபலாத பிரிவு விவாக (கண்டி/பொது) பதிவாளர் பதவி | அனுராதபுரம். மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம் மாவட்ட செயலகம் அனுராதபுரம். |

*8 - 812*

---

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

விவாக, பிறப்பு, இறப்பு பதிவு செய்கின்ற பதிவாளர் பதவி - ஹம்பாந்தோட்டை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும், குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும், பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாயும் இருத்தல் வேண்டும்.

3. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

4. விண்ணப்பதாரரின் வயது 21 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 65 வருடங்களுக்கு மேற்படாதும் இருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரர் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

6. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விவரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

7. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) காரியாலயத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

8. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2008, புரட்டாசி மாதம் 29 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்திரமுல்லை,
2008, யூலை 30.

**அட்டவணை**

**அம்பாந்தோட்டை மாவட்டம்**

| மாவட்டம் | பிரதேச செயலக பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| 1. ஹம்பாந்தோட்டை | சூரியவெவ | வடக்கு வலகண்ட பிரிவு பிறப்பு, இறப்பு மற்றும் மாகம்பத்து விவாக (பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், ஹம்பாந்தோட்டை |

*8 - 813*

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு, இறப்பு பதிவு செய்கின்ற பதிவாளர் பதவி - புத்தளம் மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும், குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும், பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாயும் இருத்தல் வேண்டும்.

3. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

4. விண்ணப்பதாரரின் வயது 21 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 65 வருடங்களுக்கு மேற்படாதும் இருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரர் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

6. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விவரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

7. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) காரியாலயத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

8. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2008, புரட்டாசி மாதம் 29 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்திரமுல்லை,
2008, யூலை 30.

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலக பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| 1. புத்தளம் | ஆனமடுவ | பேரவிலிபத்து பிரிவு பிறப்பு, இறப்பு மற்றும் தமிழ் கத்பத்து பிரிவு விவாக (கண்டி/பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், புத்தளம். |
| 2. புத்தளம் | வென்னப்புவ | முதுகட்டுவ பிரிவு பிறப்பு, இறப்பு மற்றும் பிட்டிகல் கோறளை தெற்கு பிரிவு விவாக (பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், புத்தளம். |
| 3. புத்தளம் | வனாத்தவில்லு | போம்பரிப்பு பத்து மேற்கு பிரிவு பிறப்பு, இறப்பு மற்றும் கல்பிட்டி பிரிவு விவாக (பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், புத்தளம். |
| 4. புத்தளம் | முந்தலம | கந்ததொடுவாவ, சின்னபாடு பிரிவு பிறப்பு, இறப்பு மற்றும் புத்தளம் பத்து பிரிவு விவாக பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், புத்தளம். |

| மாவட்டம் | பிரதேச செயலக பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| 5. புத்தளம் | கல்பிட்டி | கல்பிட்டி பிரிவு பிறப்பு, இறப்பு வைத்திய பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், புத்தளம். |

8 - 814

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு, இறப்பு பதிவு செய்கின்ற பதிவாளர் பதவி - கேகாலை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும், குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும், பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாயும் இருத்தல் வேண்டும்.

3. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

4. விண்ணப்பதாரரின் வயது 21 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 65 வருடங்களுக்கு மேற்படாதும் இருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரர் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

6. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விவரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

7. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) காரியாலயத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

8. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2008, புரட்டாசி மாதம் 29 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்திரமுல்லை,
2008, யூலை 30.

### அட்டவணை

### கேகாலை மாவட்டம்

| மாவட்டம் | பிரதேச செயலக பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| 1. கேகாலை | ரம்புக்கனை | ரம்புக்கனை நகர பிரிவு பிறப்பு, இறப்பு வைத்திய பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், கேகாலை. |

8 - 815

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

விவாக, பிறப்பு, இறப்பு பதிவு செய்கின்ற பதிவாளர் பதவி - மாத்தறை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும், குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும், பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாயும் இருத்தல் வேண்டும்.

3. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

4. விண்ணப்பதாரரின் வயது 21 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 65 வருடங்களுக்கு மேற்படாதும் இருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரர் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

6. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விவரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

7. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) காரியாலயத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

8. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2008, புரட்டாசி மாதம் 29 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்திரமுல்லை,
2008, யூலை 29.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலக பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| 1. மாத்தறை | வலிபிதிய | வலிகம கோறளை விவாக (பொது) பதிவாளர் பதவி மற்றும் தெனிபிதிய பிரிவு பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், மாத்தறை. |
| 2. மாத்தறை | முலதியான | கந்தபொத பத்துவ பிரிவு விவாக (பொது) பதிவாளர் பதவி மற்றும் தெய்யாந்தற பிரிவு பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், மாத்தறை |
| 3. மாத்தறை | பஸ்கொட | மோறவாக் கோறளை பிரிவு விவாக (பொது) பதிவாளர் பதவி மற்றும் பேரலபாணதர பிரிவு பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், மாத்தறை |
| 4. மாத்தறை | வலிகம | வலிகம கோறளை பிரிவு விவாக (பொது) பதிவாளர் பதவி மற்றும் மிரிஸ்ஸா பிரிவு பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், மாத்தறை |

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## கல்வி அமைச்சு

*இலங்கை அதிபர் சேவையின் வகுப்பு 1, வகுப்பு 2-I, வகுப்பு 2-II மற்றும் வகுப்பு 3 ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன் தடைதாண்டற் பரீட்சை - 2008*

இலங்கை அதிபர் சேவையின் வகுப்பு 1, வகுப்பு 2-I, வகுப்பு 2-II மற்றும் வகுப்பு 3 ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன் தடைதாண்டற் பரீட்சை 2008 திசெம்பர் மாதம் கொழும்பில் நடைபெறும் என இத்தால் அறியத் தருகிறேன்.

2. இப்பரீட்சைகளுக்குரிய பாடவிதானம் மற்றும் ஏனைய ஒழுங்குவிதிகள் 1999.07.02 ஆந் திகதிய 1086/26 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமான அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரிகளின் வசதி கருதி இப்பாடவிதானம் மற்றும் ஏனைய ஒழுங்குவிதிகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. (45 வயதை தாண்டியுள்ள உத்தியோகத்தர்களை வினைத்திறன் தடைதாண்டற் பரீட்சையிலிருந்து விடுவிக்கக்கூடியவாறு இலங்கை அதிபர் சேவை பிரமாணக் குறிப்பின் 27 ஆவது வாசகத்தின் 'ஈ' பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகள் 2001.09.12 ஆந் திகதிய பொ. நி. சு. இல. 20/2001 இலக்கம் கொண்ட சுற்றறிக்கை இரத்துச் செய்யப்பட்டுள்ளமையினால் அதிபர் சேவைக்குரிய சகல உத்தியோகத்தர்களும் வினைத்திறன் தடைதாண்டற் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.

(அ) **பரீட்சை ஒழுங்குமுறை.**- வினைத்திறன் தடைதாண்டற் பரீட்சையின் பாடங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:-

***பாட இலக்கம் 01 - தாபன விதிக்கோவையின் ஒழுங்கு விதிமுறைகள் :***

| | |
|---|---|
| 1 ஆவது பகுதி- பல்தேர்வு வினாக்கள் 50 நேரம் | (1 மணித்தியாலயம்) - 50 புள்ளிகள் |
| 2 ஆவது பகுதி - கட்டமைக்கப்பட்ட வினாப்பத்திரம் | (1 மணித்தியாலயம்) - 50 புள்ளிகள் |

***பாட இலக்கம் 02 - பாடசாலைகளின் நிதி நிருவாகம் :***

| | |
|---|---|
| 1 ஆவது பகுதி - பல்தேர்வு வினாப்பத்திரம் 50 கேள்விகள் | (1 மணித்தியாலயம்) - 50 புள்ளிகள் |
| 2 ஆவது பகுதி - கட்டமைக்கப்பட்ட வினாப்பத்திரம் | (1 மணித்தியாலயம்) - 50 புள்ளிகள் |

***பாட இலக்கம் 03 - கல்வி நிர்வாக மற்றும் மேற்பார்வை :***

| | |
|---|---|
| 1ஆவது பகுதி - பல்தேர்வு வினாக்கள் | (1 மணித்தியாலயம்) - 50 புள்ளிகள் |
| 2 ஆவது பகுதி - கட்டமைக்கப்பட்ட வினாப்பத்திரம் | (2 மணித்தியாலயம்) - 50 புள்ளிகள் |

கல்வி அமைச்சின் கொள்கை மாகாணக் கல்வித் திணைக்களம் உட்பட அமைச்சுக்கள் உட்பட அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் உட்பட நிறுவனங்களின் ஒழுங்கமைப்பு பணிகள், பாடசாலை நிர்வாகம் பாடசாலை மற்றும் சமூகத்திற்கிடையிலான தொடர்பு, பாடசாலை மேற்பார்வை, ஆசிரியர்களின் அடைவு மட்டம் மற்றும் தேசிய, பிரதேச மற்றும் பாடசாலை மட்டத்திலான கல்வித் திட்டமிடல்.

3. சித்தியடைவதற்காக பரீட்சாத்தி விண்ணப்பிக்கும் ஒவ்வொரு பாடத்திலும் குறைந்தபட்சம் 40 புள்ளிகளையாவது அல்லது அதனைவிடக் கூடுதலான புள்ளிகளை பெறவேண்டும்.

4. பரீட்சையின் மொழி மூலம் - சிங்களம் /தமிழ்/ஆங்கிலம் (விண்ணப்பிக்கும் மொழி பின்னர் மாற்றப்பட மாட்டாது).

(i) விண்ணப்பதாரி அரசகரும மொழி ஊடாக பதிலளிக்க வேண்டும்.

அல்லது

(ii) பரீட்சார்த்தி அரச சேவையில் பிரவேசிப்பதற்காக தோற்றிய போட்டிப் பரீட்சையின் மொழி மூலம் அல்லது போட்டிப் பரீட்சையின்றி அரச சேவையில் இணைந்தவர்கள் தொடர்பாக அவர்கள் அரச சேவைக்கு பிரவேசிக்க தகைமை பெற்ற மொழி மூலம் பதிலளிக்க வேண்டும்.

5. ஏதாவதொரு பரீட்சார்த்தி தமக்கு உரிமை அற்ற மொழி மூலம் பரீட்சைக்குத் தோற்றுவதாக தென்படும் பட்சத்தில் அவரின் பரீட்சார்த்தி அந்தஸ்து இரத்துச்செய்யப்படும்.

6. கீழ்க் குறிப்பிடப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய 1- 6 வரையான தலைப்பு ஏ4 அளவு கடதாசியின் முதலாவது பக்கத்திலும் எஞ்சிய தலைப்பை இரண்டாவது பக்கத்திலும் தயாரித்து விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிக்க வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் தலைப்பிலக்கம்1 -6 வரை முதலாவது பக்கத்திலும் எஞ்சியதை இரண்டாவது பக்கத்திலுமாக தயாரிக்க வேண்டும். அதற்குரிய தகவல்களை தமது கையெழுத்தினால்

தெளிவாகக் குறிப்பிட வேண்டும். மாதிரிப்படிவத்திற்கு ஒவ்வாத விண்ணப்பப்படிவங்களும் முழுமையாக பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப்படிவங்களும் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தின் போட்டோப் பிரதியை தாங்கள் வைத்துக்கொள்வது பிரயோசனமிக்கதாகும். முழுமையாகப் பூர்த்திசெய்யப்படாத விண்ணப்பப்படிவங்கள் மற்றும் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய தயாரிக்கப்படாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும் என்பதையும் மேலும் குறிப்பிடுகிறேன். விண்ணப்பப்படிவத்தைத் தயாரிக்கும்போது அதன் தலைப்பில் குறிப்பிட்ட "பரீட்சையின் பெயர்" சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடப்படல் அவசியமாகும்.

7. பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சையை நடாத்துவதற்காக அவரினால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்குவிதிகளுக்கு பரீட்சார்த்தி கட்டுப்படவேண்டும். பரீட்சைக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும் இவ்வர்த்தமானி அறிவித்தலின் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

8. விண்ணப்பப்படிவங்களை 2008 செத்தெம்பர் 26 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் பத்தரமுல்லை பெலவத்தை இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் பரீட்சை ஆணையாளர் நாயகம்" அவர்கட்கு கிடைக்கக்கூடியவாறு அதிபர்/கோட்ட கல்விப் பணிப்பாளர்/வலய கல்விப் பணிப்பாளர் அல்லது மேலதிகக் கல்விப் பணிப்பாளர்/மாகாண கல்விப் பணிப்பாளர் ஊடாக அல்லது தமது பிரிவின் பொறுப்பாளர் ஊடாக பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். இத்தினத்திற்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

9. ஏதாவதொரு பரீட்சார்த்திக்கு பரீட்சை நடைபெறுவதற்கு 07 நாட்களுக்கு முன்னர் தமது பரீட்சைக்கான அனுமதி அட்டை கிடைக்காதுபட்சத்தில் அவர் அது தொடர்பாக தாமதமின்றி பத்தரமுல்லை, பெலவத்தை பரீட்சைத் திணைக்களத்தின் பரீட்சை ஆணையாளருக்கு அறிவிக்க வேண்டும். (மின் அஞ்சல் அனுப்பும் முகவரி : பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை என்பதாகும்) பரீட்சைக்கான அனுமதி அட்டை கிடைக்கவில்லையென்பதை பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு அறிவிக்கும்போது கீழ்க் குறிப்பிடப்பட்ட தகவல்களையும் வழங்க வேண்டும். விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சைக்கான அனுமதி அட்டை அனுப்பப்பட்டவுடன் அது தொடர்பாகக் குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்தல் இலங்கைப் பரீட்சை திணைக்களத்தினால் பிரசுரிக்கப்படும். அறிவித்தல் பிரசுரமாகி 2 அல்லது 3 நாட்கள் கடந்த பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காத பட்சத்தில், அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிக்க வேண்டும். தாங்கள் வைத்திருக்கும் விண்ணப்பப்படிவத்தின் போட்டோப் பிரதி மற்றும் பற்றுச்சீட்டின் உறுதிசெய்யப்பட்ட பிரதியையும் பதிவுத்தபால் பற்றுச்சீட்டையும் ; கொழும்புக்கு வெளிப்பிரதேசமாயின் பரீட்சை அனுமதி அட்டையை அனுப்புவதற்கான 'பெக்ஸ்' இலக்கத்தையும் குறிப்பிட்டு தங்களது கோரிக்கைக் கடிதத்தையும் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்புவது பயன்மிக்கதாகும்.-

(i) பரீட்சையின் பெயர் :

(ii) பரீட்சார்த்தியின் முழுப்பெயர் :

(iii) பரீட்சார்த்தியின் முகவரி :

(iv) விண்ணப்பப்படிவத்தை தபாலில் இட்ட திகதி, பதிவுத் தபால் இலக்கம், மற்றும் தபால் அலுவலகம் ;

(v) பரீட்சைத் திணைக்களத்திற்கு அண்மித்தவர்கள் செய்தியாளர்கள் மூலம் பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு அறிவிக்க முடியும் என்றும் ஆலோசனை வழங்கப்படுகின்றது.

10. மேற்கூறப்பட்ட 8 ஆவது வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளை பூர்த்திசெய்ய தவறும் பரீட்சார்த்திகள் சமர்ப்பிக்கும் (பின்னர் சமர்ப்பிக்கும்) முறைப்பாடுகள் கருத்திற்கொள்ளப்படமாட்டாது.

11. பரீட்சை மண்டபத்தில் தமது அடையாளத்தை உறுதி செய்வதற்காக சாட்சிகளை சமர்ப்பிப்பது பரீட்சார்த்தியின் பொறுப்பாகும். இதற்காக-

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ; அல்லது

(ii) செல்லுபடியாகும் வெளிநாட்டுக் கடவுச் சீட்டு
மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

12. **பரீட்சைக் கட்டணம்.**- (அ) இப்பரீட்சைக்காக அறவிடப்படும் கட்டணம் எக்காரணம் கொண்டும் மீள திருப்பிச் செலுத்தப்படவோ அல்லது வேறொரு பரீட்சைக்காக அக்கட்டணத்தை மாற்றீடு செய்யவோ சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது.

(ஆ) முதற் தடவையாக பரீட்சைக்குத் தோற்றும் போது பரீட்சைக் கட்டணம் எதுவும் அறவிடப்படமாட்டாது.

(இ) அதற்குப் பின்னர் ஒவ்வொரு தடவைக்குமாக அறவிடப்படும் கட்டணங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | முழுமையான பரீட்சைக் கட்டணம் | : | ரூபா 120 |
| | ஒரு பாடத்திற்கு | : | ரூபா 40 |

பரீட்சைக்காக வருமான முத்திரை மூலம் கட்டணம் செலுத்த முடியும். இம்முத்திரையை விண்ணப்பப்படிவத்தில் ஒட்டி பரீட்சார்த்தியின் ஒப்பத்தை இடுவதன் மூலம் இரத்துச் செய்ய முடியும்.

13. பரீட்சை நடாத்தப்படுவது தொடர்பாக பரீட்சை ஆணையாளரினால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்குகளுக்கு பரீட்சார்த்தி கட்டுப்படவேண்டும். அச்சட்ட ஒழுங்குகளை மீறும் பட்சத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு உட்படவேண்டியேற்படும்.

எம். எம். என். டி. பண்டார,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
"இசுறுபாய",
பெலவத்தை,
பத்தரமுல்லை.
2008, ஓகத்து 08.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்**

***இலங்கை அதிபர் சேவையின் வகுப்பு 1, வகுப்பு 2-I, வகுப்பு 2-II மற்றும் வகுப்பு 3 ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன் தடைதாண்டற் பரீட்சை***

**Efficiency Bar Examination for officers in class 1, class 2-I, class 2-II and class 3 in Sri Lanka Principals Service**

*(அதிபர்/கோட்ட /வலய கல்விப் பணிப்பாளர் /மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர்/மாகாண கல்விப் பணிப்பாளர் ஊடாக பத்தரமுல்லை, பெலவத்தை இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு பதிவுத் தபாலில் சமர்ப்பிப்பதற்காக பரீட்சையின் பெயரை கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட வேண்டும்.)*

| பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் : | |
|---|---|

சிங்களம் - 2, தமிழ்- 3, ஆங்கிலம் - 4 (உரிய இலக்கத்தை கூட்டினுள் குறிப்பிடுக.)

1. (அ) முதலெழுத்துக்கள் இறுதியில் வரக்கூடியவாறு முதலெழுத்துக்களுடன் பெயர் (முதலெழுத்துக்களுடன் ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்)
(உ-ம் SILVA, H.A)
............................................

(ஆ) முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :
..........................................................................................

2. பிறந்த திகதி : ஆண்டு [ | | | ] மாதம் [ | ] திகதி [ | ]

3. (i) அதிபர் சேவையின் வகுப்பு/தரம் :----.
(ii) பாடசாலை/அலுவலகம் :----.
(iii) மாகாணக் கல்வித் திணைக்களம்/வலயக் கல்வி அலுவலகம் :----.

4. முகவரி :
(i) சொந்த :----.
(ii) அலுவலகம் :-----.
(iii) அனுமதி அட்டை அனுப்பவேண்டிய முகவரி :----.
(ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்)

5. தேசிய அடையாள அட்டை இல. :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

6. வர்த்தமானி அறிவித்தலின் 2 ஆம் பந்தியின் (அ) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பாட இலக்கத்துடன் விண்ணப்பிக்கும் பாடங்கள் :

| | |
|---|---|
| பாட இலக்கம் 01- தாபன விதிக்கோவை | |
| பாட இலக்கம் 02 - பாடசாலை நிதி நிர்வாகம் | |
| பாட இலக்கம் 03- கல்வி நிர்வாகம் மற்றும் மேற்பார்வை | |

(உரிய பாட இலக்கத்தைக் கூட்டினுள் இடவும்)

7. இதற்கு முன்னர் இப்பரீட்சைக்கு முழுமையாக அல்லது பகுதியளவில் தோற்றயிருப்பின் பாட இலக்கத்தையும் ஆண்டு மற்றும் மொழி மூலத்தையும் குறிப்பிடுக :

| பாடம் | பாட இலக்கம் | ஆண்டு | மொழிமூலம் |
|---|---|---|---|
| | | | |

8. செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம்:

| முத்திரையை இங்கே ஒட்டவும் |
|---|

மேற்கூறப்பட்ட தகவல்கள் உண்மையானதும், சரியானதும் என உறுதி மொழிகிறேன். மேலும் பரீட்சை நடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்குகளுக்கு நான் கட்டுப்படுகின்றேன்.

..............................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :..................................

**பரீட்சை ஆணையாளர் நாயகம்.**

மேலே குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சார்த்தி எனது பாடசாலை/அலுவலகத்தின் உத்தியோகத்தர் என உறுதிசெய்வதுடன் பரீட்சார்த்தி பரீட்சைக் கட்டணத்திற்கான முத்திரையை உரியவாறு இரத்துச் செய்ததாகவும் உறுதிசெய்கிறேன்.

.......................................
அதிபர்/கோட்ட/வலய கல்விப் பணிப்பாளர்/மேலதிக கல்விப் பணிப்பாளர்/ மாகாண கல்விப் பணிப்பாளரின் கையொப்பம் (அதிபராயின் பாடசாலையின் பெயரைக் குறிப்பிடுக) (தேவையற்ற சொற்களை நீக்கவும்.)

முகவரி :-----.
திகதி :----.

8- 846

---

## இலங்கை நிர்வாக சேவையில் வகுப்பு III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2007

இவ்வறிவித்தலில் 'செயலாளர்' என்ற பதம் அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் எனப் பொருள்படும் "சேவை" என்ற பதம் இலங்கை நிருவாக சேவை எனப்பொருள்படும்.

1. எழுத்துப் பரீட்சை.- இப்பரீட்சை பின்குறிப்பிடப்படும் வினாத்தாள்களைக் கொண்டமைந்திருக்கும் :-
(i) பொது நிர்வாகம் ;
(ii) நிதி ஒழுங்கு விதிகள் ;
(iii) விடய ஆய்வு.

பரீட்சைத் திகதி.-இப் பரீட்சை 2008 நவெம்பர் மாதம் 'கொழும்பு (நகர இலக்கம் 01) மற்றும் யாழ்ப்பாணம் (நகர இலக்கம் 02)' ஆகிய நகரங்களில் நடைபெறும். இப்பரீட்சையை ஒத்திவைக்கவோ இரத்துச் செய்வதற்கோ அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அறிவுறுத்தல்களின் கீழ் செயலாளருக்கு அதிகாரம் உண்டு. இதன்படி பரீட்சைக்கு தோற்றுவதற்கு எதிர்பார்க்கப்படும் நகரமும் நகர இலக்கமும் சரியாக விண்ணப்பப்படிவத்தில் ஏற்புடைய இடத்தில் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பம் செய்த நகரத்தை பின்னர் மாற்றுவதற்கு எக்காரணம் கொண்டும் இடமளிக்கப்படமாட்டாது.

நேர்முகப் பரீட்சை.- எழுத்துப் பரீட்சையில் எல்லா வினாத்தாள்களுக்கும் தோற்றி ஒவ்வொரு வினாத்தாள்களுக்கும் ஆகக் குறைந்த 40% வீத புள்ளிகளைப் பெற்றவர்களும். அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் போதுமானதென விதித்துரைக்கப்படுகின்ற உயர்மட்ட மொத்தப் புள்ளிகளைப் பெற்றவர்களுமான பரீட்சார்த்திகள் தொடர்பில் செயலாளரால் தீர்மானிக்கப்படும் திகதியில் நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.

2. நியமனம் செய்யப்படுவோரின் எண்ணிக்கையும், நியமனம் நடைமுறைப்படும் திகதியும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைகளுக்கு அமைய தீர்மானிக்கப்படும்.

3. சேவை நிபந்தனைகள்.- அரசாங்க சேவையில் நியமனங்களை நிர்வகிக்கும் பொது நிபந்தனைகளுக்கும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் இலக்கம் 1419/3 மற்றும் 2005.11.14 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2005.10.28 ஆந் திகதி சேவை பிரமாணக் குறிப்பில் விதிக்கப்பட்டுள்ள கட்டளைகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அப்பிரமாணக் குறிப்பில் மேற்கொண்டுள்ள அல்லது இதன் பிறகு மேற்கொள்கின்ற திருத்தங்களுக்கும் அமைவாக தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்தி ஒருவர் இச்சேவையில் வகுப்பு III இற்கு நியமனம் செய்யப்படுவார்.

3.1 தமக்கு அளிக்கப்பட்ட பதவியில் கடமைகளை உரிய திகதியில் பொறுப்பேற்பதற்கு தவறுகின்ற மற்றும்/அல்லது நியமனம் செய்யப்படும் பதவியில் அல்லது நியமனம் செய்யப்படும் பிரதேசத்தில் கடமைகளைப் பொறுப்பேற்பதை நிராகரிக்கின்ற அல்லது தவிர்க்கின்ற விண்ணப்பதாரிகளின் நியமனத்தை இரத்துச் செய்வதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு அதிகாரம் உண்டு.

**4. கட்டமைப்பும் மாதாந்த வருடாந்த சம்பள அளவுத்திட்டமும்:**

விசேட தரம் : ரூபா 42,390 - 12 × 1,310 - ரூபா 58,110
வகுப்பு I : ரூபா 36,755 - 17 × 1,050 - ரூபா 53,555
வகுப்பு II : ரூபா 30,175 - 8 × 790 - ரூபா 35,705
வகுப்பு III : ரூபா 22,935 - 10 × 645 - ரூபா 29,385

(நியமனத் திகதியிலிருந்து 03 ஆண்டு காலததிற்குள் I ஆவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சையிலும், நியமனத் திகதியிலிருந்து 06 ஆண்டு காலத்திற்குள் 11 ஆவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சையிலும் சித்தியடைதல் வேண்டும்.)

இப்பரீட்சை மூலம் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவது இலங்கை நிர்வாக சேவையில் வகுப்பு III இற்கு ஆகும்.

5. **தகைமைகள்**.- இப்பந்தியின் இறுதியிலுள்ள குறிப்புக்களின் ஏற்பாடுகளுக்கு அமைவாக -

(அ) (i) பின்வரும் சேவைகளில்/தரங்களில் உறுதிப்படுத்தப்பட்ட அரச அலுவலர் ஒருவராதல் வேண்டுமென்பதுடன் -

(ii) அத்தகைய சேவைகளில்/தரங்களில் ஏதேனும் ஒன்றில் அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கைகளில் 10 வருடங்களுக்குக் குறையாமல் தொடர்ந்தும் நிரந்தரமாகவும் சேவையாற்றியவராக இருத்தல் வேண்டும் ;

அல்லது

(ஆ) (i) பின்வரும் சேவைகளில்/தரங்களில் உறுதிப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தராக இருக்க வேண்டியதுடன் அத்தகைய சேவைகளில்/தரங்களில் ஏதேனும் ஒன்றிலோ அதற்கு மேலோ 5 வருடங்களுக்குக் குறையாமல் தொடர்ந்தும் நிரந்தரமாகவும் சேவையாற்றியவராக இருத்தல் வேண்டும் என்பதுடன்

(ii) பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவால் ஏற்றுக்கொள்ளப்படும் பல்கலைக்கழகமொன்றில் பட்டதாரியாகவும் இருத்தல் வேண்டும்.

**குறிப்பு**.- (அ)பல்கலைக்கழகப் பட்டம் வலுப்பெறும் திகதியானது விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி அல்லது அதற்கு முன்னரான ஒரு திகதியாக இருத்தல் வேண்டும் என்பதுடன் அன்றைய திகதியில் அல்லது அதற்கு முன்னர் மேற்படி 5 அ (i) மற்றும் (ii) அல்லது 5 ஆ (i) மற்றும் (ii) என்பவற்றில் குறிப்பிட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(ஆ) பரீட்சார்த்தி சிறந்த ஒழுக்கமுடையவராகவும், நல்லாரோக்கியம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
(இ) ஏதேனுமொரு சமயக்கிளையில் மதகுரு அந்தஸ்த்தில் உள்ள நபரெவரும் பரீட்சைக்கு தோற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்.

**சேவைகளும் தரங்களும்**.- (அ) இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் கட்டுப்பாட்டின் கீழுள்ள பின்வரும் இணைந்த சேவைகளில் ஏதேனும் ஒன்றில் உள்ள அலுவலர் ஒருவர் ;

அரசாங்க முகாமை உதவியாளர் சேவையின் அலுவலர்கள், மொழி பெயர்ப்பாளர் மற்றும் நூலகர்.

(ஆ) பின்வரும் எழுதுநர் சேவைகளில் ஏதேனும் ஒன்றில் உள்ள அலுவலர் ஒருவர் :-
அஞ்சல், புகைவண்டி, பாராளுமன்றம், பாடசாலைகள், அரசாங்க அச்சகம், சுகாதாரம்.

(இ) பின்வரும் திணைக்களத் தரங்களைச் சேர்ந்த அலுவலர் ஒருவர் அல்லது அத்தகைய தரமொன்றில் சேவையாற்றிய பின்னர் மாகாண அரச சேவையின் சமமான தரமொன்றுக்கு உள்ளீர்க்கப்பட்ட ஒரு அலுவலர்:-

| திணைக்களம்/அமைச்சு | தரம் |
|---|---|
| எல்லா அமைச்சுக்களும் | உதவிச் செயலாளர் (இ. நி. சே. சாராத)<br>பொது உறவு அலுவலர் |
| இளைஞர் விவகார அமைச்சு விளையாட்டுத்துறை பொது பொழுதுபோக்கு விவகார அமைச்சு | உதவிச் செயலாளர் (விளையாட்டு)/மாவட்ட விளையாட்டு அலுவலர்/ விளையாட்டு அலுவலர் |

| *திணைக்களம்/அமைச்சு* | *தரம்* |
|---|---|
| நிதி திட்டமிடல் அமைச்சு கொள்கை, திட்டமிடல் மற்றும் செயற்படுத்துகைத் திணைக்களம் | கருத்திட்ட அலுவலர், புள்ளிவிபர அளவை அலுவலர், புள்ளிவிபர உதவியாளர், திட்டம் செயற்படுத்துகை அலுவலர் |
| குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம் | சிரேட்ட அதிகாரம் பெற்ற அலுவலர், அதிகாரம் பெற்ற அலுவலர் |
| ஆட்பதிவுத் திணைக்களம் | உதவி ஆணையாளர் (திணைக்களத்துடனான) |
| தொகை மதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம் | புள்ளி விபர புலனாய்வாளர் |
| சுதேச மருத்துவ அமைச்சு ஆயுர்வேத திணைக்களம் | மருத்துமனைச் செயலாளர், புலனாய்வு அலுவலர் |
| சமூக சேவைகள், சமூக நலனோம்பல் அமைச்சு<br>சமூக சேவைகள் திணைக்களம் | உதவிப் பணிப்பாளர் (திணைக்களத்துடனான)<br>நலனோம்பல் மற்றும் சமூக நலனோம்பல் கண்காணிப்பாளர், வயது வந்தோர், வலுக்குறைந்தோருக்கான அரச விடுதிக் கண்காணிப்பாளர், சமூக சேவை அலுவலர் |
| நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களம் | தலைமை ஆசிரியர், தலைமை ஆசிரியை, நன்னடத்தை அலுவலர், விடுதிக் காப்பாளர், விடுதிப்பாலகர் (ஆண்), விடுதிப்பாலகர் (பெண்) |
| காணி, காணி அபிவிருத்தி அமைச்சு<br>காணி ஆணையாளர் திணைக்களம் | காணி அலுவலர்/மாவட்ட காணி அலுவலர் (திணைக்கள) காணி பயன்பாட்டு திட்ட அலுவலர்/கச்சேரி நில அளவையாளர்/குடியேற்ற அலுவலர் |
| அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு | கிராம அலுவலர் |
| அரச கரும மொழித் திணைக்களம் | ஆராய்ச்சி உதவியாளர்/மொழிபெயர்ப்பாளர் |
| தொழில் உறவுகள். மனிதவலு அமைச்சு | உதவி ஆணையாளர் (திணைக்களத்துடனான) |
| கிராமிய கைத்தொழில், சுய வேலை வாய்ப்பு ஊக்குவிப்பு அமைச்சு<br>புடவைக் கைத்தொழில் திணைக்களம் | கைத்தொழில் உதவியாளர், பொது முகாமையாளர், முகாமைத்துவ உதவியாளர், பொருளாதார உதவியாளர், தொழில்நுட்ப உதவியாளர் |
| சுகாதார பாதுகாப்பு, போஷாக்கு அமைச்சு | மருத்துவமனைப் பதிவாளர், திட்டமிடல் மற்றும் நிகழ்ச்சித் திட்ட அலுவலர், பொதுச் சுகாதார பரிசோதகர், பதிவு செய்த உதவி மருத்துவ அலுவலர் |
| உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சு<br>மாகாண சபைகள் திணைக்களம் | உதவி ஆணையாளர் (திணைக்களத்துடனான) உள்ளூராட்சி எழுதுநர், மொழிபெயர்ப்பாளர், சிறாப்பர், சுருக்கெழுத்தாளர், தட்டெழுத்தாளர், பண்டசாலைக் காப்பாளர் |
| வர்த்தக, சந்தைப்படுத்தல் விருத்தி, நுகர்வோர் விவகார அமைச்சு<br>அளவைக் கூறு, தரநிர்ணயங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம் | நிறைகள், அளவுகள் பரிசோதகர், விலைக்கட்டுப்பாட்டுப் பரிசோதகர் |
| விவசாய அபிவிருத்தி, கமத்தொழில் சேவைகள் அமைச்சு<br>விவசாயத் திணைக்களம்<br>கமநல சேவைகள் திணைக்களம் | விவசாய ஆலோசகர், பிரதேச அலுவலர், உதவி ஆணையாளர் (திணைக்களத்துடனான) |
| நீதி, சட்ட மறுசீரமைப்பு அமைச்சு<br>சட்ட வரைநர் திணைக்களம், உயர் நீதிமன்றம் | மொழி பெயர்ப்பாளர், வெளியீட்டு உதவியாளர், சுருக்கெழுத்தாளர் |
| போக்குவரத்து அமைச்சு<br>மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம் | மோட்டார் வாகனப் பரிசோதகர் |

| திணைக்களம்/அமைச்சு | தரம் |
|---|---|
| நீர்ப்பாசன, நீர் முகாமைத்துவ அமைச்சு<br>நீர்ப்பாசன திணைக்களம் | திட்டமிடல் உதவியாளர் |
| மத்திய பிராந்திய அபிவிருத்தி அமைச்சு | அபிவிருத்தி அலுவலர்/கிராம அபிவிருத்தி சிரேஷ்ட மேற்பார்வையாளர்/சிரேஷ்ட கிராம அபிவிருத்தி உதவியாளர்/கிராம அபிவிருத்தி அலுவலர்/கிராம அபிவிருத்தி உதவியாளர் |
| கலாசார அலுவல்கள் அமைச்சு,<br>தேசிய நூதனசாலை,<br>கலாசார அலுவல்கள் திணைக்களம் | கலாசார அலுவலர்கள் |
| கல்வி அமைச்சு | மாணவர் விடுதி கண்காணிப்பாளர் |
| தகவல் மற்றும் ஊடகத்துறை அமைச்சு<br>அரசாங்கத்தின் தகவல் திணைக்களம்<br>அரசாங்கத்தின் அச்சகம் | பதிப்பு அலுவலர், ஒப்புநோக்குநர் (சரவையிடுநர்) |
| தபால் தொலைத்தொடர்பு அமைச்சு<br>தபால் திணைக்களம் | ரீ 3-5-1 மற்றும் ரீ-3-4 சம்பள அளவுத் திட்டத்தில் உள்ள இணைந்த தபால் சேவை அலுவலர்கள், இணைந்த தபால் சேவையின் தபால் சேவை அலுவலர்கள் (ஆ 1) |
| மீன்பிடித்துறை நீர்வளங்கள் அமைச்சு<br>மீன்பிடித்துறை நீர்வளங்கள் திணைக்களம் | மீன்பிடி உதவியாளர் |
| கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் | மாவட்ட அலுவலர்/கூட்டுறவுச் சங்க பரிசோதகர் |
| உணவு ஆணையாளர் திணைக்களம் | உணவுக் கட்டுப்பாட்டு பரிசோதகர் (முன்னர் உணவு மற்றும் விலைப் பரிசோதகர் |

(ஈ) மாகாண அரசாங்க சேவையின் மேல்காட்டப்பட்ட அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள பின்வரும் ஏதேனும் சேவையைச் சேர்ந்த அலுவலர் ஒருவர் :-

எழுதுநர், சுருக்கெழுத்தாளர், தட்டெழுத்தாளர், சிறாப்பர், கணக்குப் பதியுநர், மொழிபெயர்ப்பாளர், பண்டகசாலைக் காப்பாளர், நூலகர்

(உ) மாகாண அரசாங்க சேவைகளின் மேல்காட்டப்பட்டுள்ள அடிப்படை தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள பின்வரும் ஏதேனும் சேவையைச் சேர்ந்த அலுவலர் ஒருவர் :-

அரசிறை பரிசோதகர், தொழில் நலனோம்பு அலுவலர், நிறைகள் அளவைகள் பரிசோதகர், கொழும்பு மாநகர சபயின் அறக்கொடை புண்ணிய ஆணையாளர் திணைக்களத்தின் நிவாரண அலுவலர், பதவி நிலை அலுவலர் மற்றும் செயலாளர், முகாமைத்துவச் சேவை அலுவலர், உள்ளூராட்சி அலுவலர்

(ஊ) இந்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்படாத பதவிகளுக்கு உரிய அலுவலர்கள் பரீட்சைக்கு விண்ணப்பம் செய்வது சட்ட விரோதமாவதுடன் (பதவிப் பெயர்களில் மாற்றம் ஏற்படுதல் காரணமாக புதிய பதவிகளுக்கு உள்ளீர்ப்புச் செய்துள்ள அலுவலர்கள் தவிர) அவர்கள் ஏதேனும் முறையில் பரீட்சைக்கு தோற்றினாலும் நியமனத்திற்காக கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

**குறிப்பு :**

(i) 2007.10.05 ஆந் திகதிக்கு உடன் முன்னரான 05 ஆண்டு காலப்பகுதிக்குள் திருப்திகரமான சேவை அறிக்கை இல்லாவிடின் பரீட்சைக்கு தோற்றினாலும் நியமனத்திற்காக கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

(ii) விண்ணப்பதாரர் ஒருவர் -

(அ) தகைமைகளைப் பூர்த்தி செய்ய வேண்டிய திகதிக்கு உடன் முன்னரான 05 ஆண்டு காலப்பகுதிக்குள் சகல சம்பள ஏற்றங்களையும் உரிய திகதியில் உழைத்துப் பெற்றும் ; அத்துடன்

(ஆ) இக்காலப் பகுதியில் புரியப்பட்ட ஏதேனும் குற்றத்திற்காக (எச்சரிக்கை தவிர்த்து) தண்டிக்கப்படாமலும் இருந்தால் அவர் திருப்திகரமான சேவையை ஆற்றியுள்ளார் என கருதப்படும்.

(iii) விண்ணப்பம் கோரப்படும் முடிவுத் திகதியில் பணித்தடை செய்யப்பட்டுள்ள அலுவலர் ஒருவர் தகுதியற்றவர் ஆவார்.

(iv) இலங்கை நிருவாகச் சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை மற்றும் திறந்த போட்டிப் பரீட்சை ஆகிய இரண்டையும் சேர்த்து கணிப்பிடும் போது இரண்டு தடவைகளுக்கு மேல் எவரும் அதில் தோற்ற முடியாது.

6. **பரீட்சைக் கட்டணம்.**- இப்பரீட்சைக்குரிய கட்டணம் 300 ரூபாவாகும். அது விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னர் எந்தவொரு மாவட்ட செயலகம்/பிரதேச செயலகம் என்பவற்றில் வருவாய்த் தலைப்பு 4000-20-03-20-13 இல் வரவு வைத்தல் வேண்டும். மாவட்ட செயலகம், பிரதேச செயலகம் என்பவற்றில் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தின் உரிய கூட்டில் ஒட்டுதல் வேண்டும். இக்கட்டணம் மீளளிப்புச் செய்யப்படமாட்டாது. பற்றுச்சீட்டின் நிழற்படப்பிரதியை தம் வசம் வைத்துக் கொள்ளுதல் பயனுள்ளதாகும்.

7. **விண்ணப்பிக்கும் முறை.**- (அ) விண்ணப்பம் இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டிருக்கும் மாதிரி விண்ணப்பப்படிவ உருவில் அமைந்திருத்தல் வேண்டும். அதைப் பரீட்சார்த்தி 8 1/2 "x 12" A4 அளவுடைய தாளின் இரண்டு பக்கங்களையும் உபயோகித்து தனது சொந்த கையெழுத்தில் பூர்த்தி செய்ய வேண்டும். 1.0 தொடக்கம் 3.11 வரையிலான கூடுகள் விண்ணப்பப்படிவத்தில் முதலாவது பக்கத்திலும் 4.0 தொடக்கம் 8.0 வரையிலான கூடுகள் அதன் மறுபக்கத்திலும் உள்ளடங்கும் வண்ணம் தமது விண்ணப்பப்படிவத்தைத் தயார் செய்தல் வேண்டுமென்பதை விசேடமாக கருத்தில் கொள்ளுதல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமையாத விண்ணப்பப்படிவங்களும் முழுமைபெறாத தகவல்கள் உள்ளடக்கியுள்ள விண்ணப்பப்படிவங்களும் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படுவதுடன் அந்த விண்ணப்பப்படிவத்தில் நிழற்படப் பிரதியினை தம் வசம் வைத்துக் கொள்ளுதல் பயனுள்ளதாகும். விண்ணப்பப்படிவத்தை தயார் செய்யும் போது பரீடசையின் பெயரை சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் வேண்டும்.

(ஆ) பரீட்சார்த்தி பரீட்சைக்கு தோற்றுவதற்கு எதிர்பார்க்கும் மொழியிலேயே பூர்த்தி செய்தல் வேண்டும்.

(இ) பரீட்சைக்காக பூர்த்தி செய்த விண்ணப்பப் படிவத்தைப் பதிவு தபால் மூலம் 2008.09.26 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்க கூடியவாறு "பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கை பரீட்சை திணைக்களம், (ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சை கிளை) பெலவத்தை, பத்தரமுல்ல" என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவம் வைத்து அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இலங்கை நிர்வாக சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை 2007" என்ற சொற்களை தெளிவாக எழுதி இருத்தல் வேண்டும். இத்திகதிக்கு பின்னர் கிடைக்கப் பெறும் எந்தவொரு விண்ணப்ப படிவமும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(ஈ) விண்ணப்பப்படிவத்தில் பரீட்சார்த்தியின் கையொப்பத்தை அரசாங்க பாடசாலையொன்றின் அதிபரொருவர், சமாதான நீதவான் ஒருவர், சத்தியப்பிரமாணம் செய்த ஆணையாளர் ஒருவர், சட்டத்தரணியொருவர், பிரசித்திபெற்ற நொத்தாரிசு ஒருவர், முப்படையின் அத்தியட்சகர், அதிகாரத்தைப் பெற்றுள்ள அலுவலர் ஒருவர், பொலிஸ் சேவையில் பிரசுரிக்கப்பட்ட பதவியொன்றை வகிக்கும் அலுவலர் ஒருவர் அல்லது ரூபா 237,060/- இற்கு அதிகமான அடிப்படை ஆண்டுச் சம்பளம் பெறும் அரசாங்கத்தின் நிரந்தர பதவி வகிக்கும் அலுவலர் ஒருவர் உறுதிப்படுத்தல் வேண்டும்.

(உ) எல்லா அம்சங்களிலும் நிறைவு பெற்றிராத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பம் அஞ்சலில் தொலைந்துவிடுதல், தாமதிக்கப்படுதல் என்ற முறைப்பாடுகள் எதுவும் கவனிக்கப்படமாட்டாது.

(ஊ) பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டை வழங்கியவுடன் அது தொடர்பாக பரீட்சை திணைக்களம் பத்திரிகை அறிவிப்பொன்றை வெளியிடும். அறிவித்தல் வெளியாகி 2/3 நாட்கள் சென்ற பின்னரும் அனுமதி அட்டை கிடைக்கப் பெறாவிடின் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு அது தொடர்பாக பரீட்சை திணைக்களத்திடம் அறிவித்தல் வேண்டும். விண்ணப்பப் படிவம் மற்றும் பணம் செலுத்திய பற்றுச்சீட்டு என்பவற்றின் உறுதிப்படுத்திய நிழற்பட பிரதிகள் பதிவுசெய்த பற்றுச்சீட்டு, கொழும்பின் வெளிப்பிரதேசமாயின் அனுமதி அட்டை அனுப்புவதற்காக பெக்ஸ் இலக்கம் குறிப்பிட்ட உங்களது கோரிக்கை கடிதம் என்பவற்றை தம் வசம் வைத்துக் கொண்டு இலங்கை பரீட்சை திணைக்களத்திடம் அறிவித்தல் பயனுள்ளதாகும்.

8. **பரீட்சைக்கு அனுமதியளித்தல்.**- (அ) விண்ணப்பங்களை அனுப்பிய யாவருக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகம் அனுமதி அட்டைகளை அனுப்புவார். பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி அவரது அனுமதி அட்டையைப் பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படமாட்டார்.

(ஆ) பரீட்சார்த்தி தனக்குக் குறித்து ஒதுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்திலேயே பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தாம் பரீட்சைக்கு தோற்றும் முதல் நாளிலேயே பரீட்சை மண்டபத்தின் மேற்பார்வையாளரிடம் அனுமதி அட்டையைக் கையளித்தல் வேண்டும். ஒவ்வொரு பரீட்சார்த்தியும் கடைப்பிடிக்க வேண்டிய சட்ட விதிமுறை இவ் வர்த்தமானியின் ஆரம்பத்தில் வெளியிடப்பட்டுள்ளது. பரீட்சை நடாத்தல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் சட்டத்திட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கீழ்படிதல் வேண்டும். அச்சட்ட விதிகளை மீறினால் பரிட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் தண்டனைகளுக்கு ஆளாகுதல் வேண்டும்.

**குறிப்பு**.- பரீட்சார்த்திகளுக்குப் பரீட்சை அனுமதிப்பத்திரம் ஒன்று வழங்குவதை அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எல்லாத் தகுதிகளையும் உடையவர் என்பதை ஏற்றுக்கொள்ளும் ஒரு சாதனமாகக் கொள்ளவியலாது. அறிக்கையில் குறிப்பிட்டுள்ள சகல தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ளார் என உத்தேச அடிப்படையில் பரீட்சைக்கான அனுமதி அட்டை வழங்கப்படும்.

9. **பரீட்சார்த்தியின் அடையாளம்**.- பரீட்சார்த்தி தான் தோற்றும் ஒவ்வொரு பாடத்தின் போதும் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தனது ஆளடையாளத்தைப் பரீட்சை மண்டபத்தில் நிரூபித்துக் காட்டுதல் வேண்டும். இந்த நோக்கத்திற்குப் பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை ;
(ஆ) செல்லுபடியான கடவுச்சீட்டு.

10. **பொய்யான தகவல்கள் அளிப்பதற்கு தண்டனை**.- பரீட்சார்த்தி ஒருவர் தகுதியற்றவர் எனக் காணப்பட்டால் அவரது பரீட்சார்த்த உரிமை எந்தக் கட்டத்திலாயினும் பரீட்சையின் முன்னரோ பரீட்சையின் போதோ பரீட்சைக்குப் பின்னரோ இரத்துச் செய்யப்படும். பரீட்சார்த்தி அளித்த விபரங்களில் எவையேனும் அவரது அறிவுக்கு எட்டியவரையில் பொய்யானவை என்று கண்டுபிடிக்கப்பட்டால் அல்லது அவர் எவையேனும் முக்கிய தகவல்களை வேண்டுமென்றே மறைத்திருந்தால் அவர் அரசாங்க சேவையில் இருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவார்.

11. இவ்வறிவித்தலில் ஏற்பாடு செய்யப்படாத ஏதாவது விடயம் இருப்பின் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக செயலாளர் தீர்மானித்தபடி நடவடிக்கை எடுக்கப்படும்.

12. **பரீட்சைத் திட்டம்**.- பரீட்சை மொழி மூலம் :-

(அ) பரீட்சையானது சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும்.

(ஆ) பரீட்சார்த்தி அரசாங்க சேவையில் சேருவதற்கான தகைமைப் பரீட்சையை/நேர்முகப் பரீட்சையை எந்த மொழியில் சித்தியடைந்தாரோ அந்த மொழியில் இப்பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும் அல்லது அரச கரும மொழியில் தோற்றுதல் வேண்டும்.

**குறிப்பு** :

(i) பரீட்சார்த்தி பரீட்சையின் எல்லா வினாத்தாள்களுக்கும் ஒரே மொழியில் மட்டும் விடை எழுதுதல் வேண்டும்.

(ii) பரீட்சார்த்தி விண்ணப்பத்திற் கொடுத்த பரீட்சை மொழியை மாற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்.

13. **சோதிக்கும் முறை**:

(அ) பின் குறிப்பிடும் விடயங்களை உள்ளடக்கிய எழுத்திலான வினாத்தாளைக் கொண்டிருக்கும் :

| | | |
|---|---|---|
| பொது நிர்வாகம் | - 100 புள்ளிகள் | - 3 மணித்தியாலங்கள் |
| நிதி ஒழுங்குவிதிகள் | - 100 புள்ளிகள் | - 3 மணித்தியாலங்கள் |
| விடய ஆய்வு | - 100 புள்ளிகள் | - 2 மணித்தியாலங்கள் |

(ஆ) வாய்மொழித் தேர்வு - 100 புள்ளிகள்

எழுத்துப் பரீட்சையில் எல்லா வினாத்தாள்களுக்கும் தோற்றிய விண்ணப்பதாரர்களுள் தகைமை பெற்றவர்கள் வாய்மொழித் தேர்வுக்காக அழைக்கப்படுவர். ஒவ்வொரு வினாத்தாளிலும் ஆகக் குறைந்த 40% வீத புள்ளிகளைப் பெற்றவர்களும் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் போதுமானதென விதித்துரைக்கப்படுகின்ற உயர்மட்ட மொத்தப் புள்ளிகளைப் பெற்றவர்களுமான பரீட்சார்த்திகள் மட்டும் நேர்முகப் பரீட்சைகளுக்கு அழைக்கப்படுவர். மேற்கூறப்பட்ட தகைமைகளைப் பெறுகின்ற பரீட்சார்த்திகள் போதிய அளவு இருப்பார்களாயின் வெற்றிட எண்ணிக்கையைப் போல் இரு மடங்கான பரீட்சார்த்திகள் வாய்மொழித் தேர்வுக்காக அழைக்கப்படுவர்.

(புள்ளிகள் வழங்கும் முறை அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் ஆட்சேர்ப்பின் ஆரம்பத்தில் அங்கீகரிக்கப்படும்.)

**குறிப்பு**.- வாய்மொழித் தேர்வுக்காக அழைத்தலானது நியமனத்திற்கான தகைமைகளை பூர்த்திச் செய்ததாக கருதப்பட மாட்டாது பூர்த்தி செய்யப்படுகின்ற வெற்றிட எண்ணிக்கை அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் விதிக்கப்பட்டுள்ளவாறாகும்.

ஒரு தடவையில் நியமிக்கப்படும் எண்ணிக்கை அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.

14. **பாட விதானம்**.- (அ) பொது நிர்வாகம்.- பின்வரும் அத்தியாயங்களின் மீது விசேட கவனம் செலுத்தி தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகள், அலுவலக பரிச்சயம், அலுவலக முறைகள் மற்றும் தற்காலத்தில் உபயோகிக்கப்படும் சுற்றறிக்கை அறிவுரைகள் பற்றி பரீட்சார்த்தி அடைந்துள்ள அறிவையும் புரிந்துணர்வையும் சோதிப்பது இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது :-

I, II, III, V, VI, VII, IX, XI, XXIII, XXV, XXVI, XXVII, XXVIII, XXIX, XXX, XXXI, XXXII, XXXIII, XLVII, XLVIII

(ஆ) நிதி ஒழுங்கு விதிகள்:

(i) அரசாங்க நிதி ஒழுங்கு விதிக்கோவை பகுதி I (X அத்தியாயம் தவிர்ந்த)
(ii) நடப்பாண்டின் மதிப்பீடுகள் - அவற்றைத் தயாரித்தல், வருமானத் தலைப்புகள், நிதி மற்றும் ஒதுக்கீடு.
(iii) கச்சேரிகளுக்கு உரியதான விசேட கணக்குகளுக்கு உரிய கட்டளைச் சட்டங்கள்.

(இ) விடய ஆய்வு- பரீட்சார்த்தியின் ஆக்கபூர்வமான சிந்தனா சக்தியையும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் ஆற்றலையும் சோதிக்கும் வகையில் இந்த வினாத்தாள் தயாரிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் பரீட்சார்த்தி தீர்வு வழங்குவதற்காக சந்தர்ப்பம் ஒன்றை அல்லது அதைப் பார்க்க கூடியவற்றை தொடர்புபடுத்தி உருவாக்கப்பட்ட பிரச்சினைகள் அவருக்கு முன்வைக்கப்படும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப் படி,

டி. திசாநாயக்க,
செயலாளர்,
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2008, ஓகத்து மாதம் திகதி..........

மாதிரி விண்ணப்பப்படிவம்

| |
|---|
| |

அலுவலக உபயோகத்திற்காக

**இலங்கை நிருவாக சேவையில் வகுப்பு III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2007**

1.0 மொழி மூலம் : [ ]
பரீட்சைக்கு தோற்றும் மொழி மூலம் (உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)
(சிங்களம் - 2, தமிழ் - 3, ஆங்கிலம் - 4) [ ]

2.0 நகரம் :

| பரீட்சைக்கு தோற்றுவதற்கு எதிர்பார்க்கப்படும் நகரம் : |
|---|
| |

| உரிய நகர இலக்கம் |
|---|
| |

(பரீட்சை அறிவித்தலில் 1 ஆவது பந்தியின் படி)
நகரத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

3.0 தனிப்பட்ட தகவல்கள் .-

3.1 முதலெழுத்துக்களை இறுதியாக இட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) :-----.
உதாரணம் : SILVA, A. B.

3.2 முழுப்பெயர் ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில் :-----.

3.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :-----.

3.4 அலுவலக முகவரி (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) : (அனுமதி அட்டை இந்த முகவரிக்கு அஞ்சலிடப்படும்) :-----.

3.5 அலுவலக முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :-----.

3.6 சொந்த முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :-----.

3.7 பெண்/ஆண் (ஆண் - 0, பெண் - 1) :- [ ]
(உரிய இலக்கத்தை கூட்டினுள் குறிப்பிடவும்)

3.8 திருமணமானவரா? திருமணமாகாதவரா? (திருமணமானவர் -1, திருமணமாகாதவர் - 2) :- [ ]
(உரிய இலக்கத்தை கூட்டினுள் குறிப்பிடவும்)

3.9 இனம் (சிங்களம் -1, தமிழ் - 2, இந்தியத் தமிழ் - 3, முஸ்லிம் - 4, வேறு - 5) :- [ ]
(உரிய இலக்கத்தை கூட்டினுள் குறிப்பிடவும்)

3.10 தேசிய அடையாள அட்டை இலக்கம் : | | | | | | | | | | |

3.11 பிறந்த திகதி : ஆண்டு : | | | | | மாதம்: | | | திகதி : | | |

4.0 நீங்கள் சேவைக்கு/தரத்திற்கு உட்சேர்வதற்காக தகைமைகள் பெற்ற பரீட்சை/வாய்மொழிப் பரீட்சை (சித்தியடைந்த மொழியை குறிப்பிடவும்) :-----.

5.0 (i) வர்த்தமான அறிவித்தலின் 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட சேவைகள் திணைக்கள தரங்களில் உமது சேவை/தரம் (வகுப்பு, தரம் அல்லது பிரிவு ஏதேனும் இருப்பின்) தருக (நீர் ஒன்றுக்கு மேற்பட்ட தகுதியுடைய சேவைகளில்/தரங்களில் சேவையாற்றி இருந்தால் அத்தகைய சேவைகள்/தரங்கள் திகதிகளுடன் குறிப்பிடுதல் வேண்டும்) :-----.

(அ) தற்போது வகிக்கும் பதவி :-----.
பதவி எச்சேவையைச் சேர்ந்தது (அரச சேவை/மாகாண அரச சேவை) :----.
தரம் :-----.
வகுப்பு/பிரிவு :-----.
பதவியில் நியமிக்கப்பட்ட திகதி :-----.
அப்பதவியில் உறுதிப்படுத்தப்பட்ட திகதி :-----.
பட்டம் பெற்ற திகதி :-----.

(ஆ) தகுதிகளுக்கான வேறு சேவைகள், தரங்கள் இருப்பின் :-

| சேவை/தரத்தின் பெயர் | நியமிக்கப்பட்ட திகதி | உறுதி செய்யப்பட்ட திகதி | சேவைக்காலம் | |
|---|---|---|---|---|
| | | | தொடக்கம் | வரை |
| (1) .............................. | .................... | .................................... | .................. | ............. |
| (2) .............................. | .................... | .................................... | .................. | ............. |
| (3) .............................. | .................... | .................................... | .................. | ............. |
| (4) .............................. | .................... | .................................... | .................. | ............. |
| (5) .............................. | .................... | .................................... | .................. | ............. |

(ii) வர்த்தமானியில் 5 ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ள சேவைகளில்/தரங்களில் 2007.10.05 ஆந் திகதிக்கு நிரந்தரமாகவும் தொடர்ச்சியாகவும் சேவையாற்றிய மொத்த சேவைக்காலம் (ஒழுங்குமுறையில்) :-----.

6.0 (i) இலங்கை நிருவாக சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு நீர் தோற்றிய ஆண்டுகள் :-

(i) ------,
(ii) ------.
(iii) ------.
(iv) ------.
(v) ------.
(vi) ------.

(ii) இலங்கை நிருவாக சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு நீர் தோற்றிய ஆண்டுகள் :-----.

(i) ------.
(ii) ------.
(iii) ------.

7.0 காசுப் பற்றுச்சீட்டை உறுதியாக ஒட்டுக :

| |
|---|
| பற்றுச்சீட்டை கழறாதவாறு இங்கு ஒட்டிவிடவும். நிழற்பட பிரதியை தம் வசம் வைத்துக் கொள்ளவும். |

8.0 **பரீட்சார்த்தியின் உறுதியுரை**.- 2007.10.05 ஆந் திகதிக்கு உடன் முன்னரான ஐந்துவருட காலப்பகுதியில் (சேவைகள் அல்லது திணைக்களப் பரீட்சைகளில் சித்தியடையும் நிபந்தனையான ஆண்டேற்றங்கள் நீங்கலாக) சகல ஆண்டேற்றங்களையும் உழைத்துப் பெற்றுள்ளேன் என்பதையும் நான் இழைத்த ஏதேனும் தவறுக்காக (எச்சரிக்கை நீங்கலாக) எந்தவொரு ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் ஆளாகியிருக்கவில்லையென்பதையும் வெளிப்படுத்துகிறேன்.

இந்த மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு நான் தகுதியுடையவர் என்பதையும் எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் இங்கு தரப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவை என்பதையும் இப்பரீட்சைக்குரிய கட்டணம் செலுத்தப்பட்டுள்ளதைக் குறிக்கும்

முகமாக .......... ஆந் திகதியிட்ட .......... ஆம் இலக்கப் பற்றுச்சீட்டு இங்கு ஒட்டப்பட்டுள்ளது என்பதையும் வெளிப்படுத்துகிறேன். மேலும் நான் இப்பரீட்சைக்குரிய விதிகளுக்கு கட்டுப்படுவதற்கும் இப்பரீட்சையின் ஒழுங்குவிதிகளுக்கும் அமைய நான் தகுதியற்றவரென பரீட்சைக்கு முன்னரோ பரீட்சையின் போதோ பரீட்சைக்குப் பின்னரோ கண்டுபிடிக்கப்படுமிடத்து எனது பரீட்சார்த்த உரிமையை இரத்துச் செய்வதற்கும் நான் உடன்படுகிறேன்.

-----,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :----.

*9.0* **திணைக்களத் தலைவரின் சான்றிதழ் (சுயவிபரக் கோவைக்கு) :**

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி .................... என்பவர் .................... ஆந் திகதிக்கு முற்பட்ட ஐந்து வருடகாலத்தில் (சேவை அல்லது திணைக்களப் பரீட்சைகளில் சித்தியெய்தியடையும் நிபந்தனையான ஆண்டேற்றங்கள் நீங்கலாக) எல்லா ஆண்டேற்றங்களையும் உழைத்துப் பெற்றுள்ளார் என்பதையும் இக்காலப்பகுதியில் அவர் இழைத்த ஏதேனும் தவறுக்காக (எச்சரிக்கை நீங்கலாக) எந்தவொரு ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் ஆளாகியிருக்கவில்லை என்பதையும் இவ்விண்ணப்பத்தில் தரப்பட்டுள்ள தகவல்கள், அறிக்கைகள் என்பவற்றின் மூலம் சரியானவை எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதென்பதையும் உரிய வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிட்டுள்ள விதிகளுக்கு அமைவாக இப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு அவர் தகுதியுடையவர் என்பதையும் அவர் என் முன்னிலையில் இவ்விண்ணப்பத்தில் கையொப்பமிட்டார் என்பதையும் இத்தால் சான்றுபடுத்துகிறேன்.

-----,
திணைக்களத் தலைவரின்/அதிகாரம்
பெற்ற உத்தியோகத்தரின் கையொப்பம்.

பெயர் :-----.
பதவி :-----.
திகதி :-----.
(பதவி முத்திரை உட்பட)

8-936

---

## கல்வி அமைச்சு

தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளில் காணப்படும் வெற்றிடங்களுக்காக இலங்கை ஆசிரிய சேவைக்கு மௌலவி ஆசிரியர்களை சேர்த்துக்கொள்வதற்கான போட்டிப் பரீட்சை – 2008/2009

நாட்டின் தேசிய மற்றும் மாகாணப் பாடசாலைகளில் காணப்படும் ஆசிரிய சேவையின் வெற்றிடங்களுக்காக ஆசிரிய சேவைப் பிரமாணக் குறிப்பிற்கமைய இலங்கை ஆசிரிய சேவையின் 3-II தரத்திற்கு மௌலவி ஆசிரியர்களை சேர்த்துக்கொள்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**1. தகைமை :**

1.1 பொதுத் தகைமைகள் :

I. இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும் ;
II. நல்லொழுக்கம் மற்றும் தேகாரோக்கியம் கொண்டவராக இருக்க வேண்டும் ;
III. 2008.09.30 ஆந் திகதியன்று 18 வயதிற்குக் குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும்.

1.2 போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தேவையான கல்வித் தகைமைகள் :

1.2.1 ஆசிரிய சேவைப் பிரமாணக் குறிப்பிற்கமைய 2008.09.30 ஆந் திகதியன்று க.பொ.த. (சா.த.) பரீட்சையில் 02 இற்கு மேற்படாத தடவைகளில் தாய்மொழி, கணிதம், அரபு ஆகிய பாடங்களில் சித்தியடைந்து எவையேனும் 03 பாடங்களில் திறமைச் சித்திகளுடன் 06 பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

1.2.2. க.பொ.த. (உ.த.) பரீட்சையில் எவையேனும் 03 பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

1.2.3.1 இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் அல் ஆலிம் பரீட்சையின் இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ;

அல்லது

1.2.3.2 முஸ்லிம் சமய விவகாரத் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட அரபுக் கல்லூரி ஒன்றில் 07 வருடகால பாடநெறியைத் தொடர்ந்து மௌலவி சான்றிதழ் பெற்றிருத்தல்.

ஆசிரிய சேவையில் பிரவேசிக்கும் சகலரும் மேற்கூறப்பட்ட நிபந்தனைகளைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

**2. ஆட்சேர்ப்பு முறை மற்றும் சேவை நிபந்தனைகள் :**

2.1 தகைமை கொண்டோரை சேர்த்துக்கொள்வதற்காக, விண்ணப்பக்காரர்களுக்காக அரச வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கமைய தேசிய மற்றும் மாகாணப் பாடசாலைகளுக்காக விண்ணப்பித்த விண்ணப்பதாரர்களுக்காக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் ஆசிரியர்களை சேர்த்துக்கொள்வதற்கான போட்டிப் பரீட்சையில் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் முன்னுரிமைக்கமைய நேர்முகப் பரீட்சை ஊடாக ஆட்சேர்ப்புகள் மேற்கொள்ளப்படும். இது எவ்வாறாக இருப்பினும் முன்னுரிமையை கருத்திற் கொள்வதற்காக ஒவ்வொரு வினாப்பத்திரத்திலும் 40% புள்ளிகளைப் பெற்றிருக்க வேண்டும். நேர்முகப் பரீட்சைக்காக புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

2.2 மாகாணப் பாடசாலைகளுக்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் குறைந்தபட்சம் 05 வருடங்களேனும் விண்ணப்பிக்கும் மாவட்டத்தில் நிரந்தர வசிப்பிடத்தைக் கொண்டவராக இருக்க வேண்டும்.

2.3 சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூலம் மாத்திரம் இப்பரீட்சை நடைபெறும்.

2.4 நேர்முகப் பரீட்சைச் சபை கல்வி அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்படும்.

2.5 அரச நியமனத்தை நிருவகிக்கும் பொது நிபந்தனைகளுக்கும் இலங்கை ஆசிரிய சேவை பிரமாணக் குறிப்பின் மீது விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும் அப்பிரமாணக் குறிப்புகளுக்கமைய மேற்கொள்ளப்பட்டுள்ள அல்லது இதற்கு பின் விதிக்கப்படும் மறுசீரமைப்புகளுக்கும் கட்டுப்படக்கூடியவாறு தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரி இலங்கை ஆசிரிய சேவையின் 3-II தரத்திற்கு நியமிக்கப்படுவார். பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 6/2006(iv) இல் T-S-1-2006(A) சம்பள அளவின் ரூ. 13,120-10×145-5×180- ரூ. 15,470 மாதாந்த சம்பளத் திட்டத்தின் கீழ் சம்பளம் வழங்கப்படும்.

2.6 இந்நியமனம் நிரந்தரமானது ; ஓய்வூதிய சம்பளம் கொண்டது.

2.7 பதவி உயர்வுகள் இலங்கை ஆசிரிய சேவைப் பிரமாணக் குறிப்பின் ஒழுங்கு விதிகளுக்கமைய மேற்கொள்ளப்படும்.

**3. விண்ணப்பிக்கும் முறை :**

3.1 A4 அளவு கடதாசியின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி இவ்வறிவித்தலின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தில் தலைப்பு இல. 01-4 வரை முதலாவது பக்கத்திலும் 05-08 வரை இரண்டாவது பக்கத்திலும் விண்ணப்பப்படிவத்தை தயாரிக்க வேண்டியதுடன் அதற்குரிய தகவல்களை தமது கையெழுத்தினால் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விண்ணப்பப்படிவத்தை தயாரிக்கும் போது அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயரை சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடவேண்டியது அவசியமாகும்.

3.2 விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்யும்போது நிரந்தரமாக வதியும் மாவட்டம் மற்றும் மாவட்ட இலக்கத்தை கீழ்க் குறிப்பிடப்பட்ட அட்டவணைக்கமைய குறிப்பிடவும். இதற்குப் புறம்பாகக் குறிப்பிடப்படும் தகவல்கள் கொண்ட விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்:-

| இலக்கம் | மாவட்டம் | இலக்கம் | மாவட்டம் | இலக்கம் | மாவட்டம் |
|---|---|---|---|---|---|
| 01 | கொழும்பு | 09 | ஹம்பாந்தோட்டை | 17 | திருகோணமலை |
| 02 | கம்பஹா | 10 | யாழ்ப்பாணம் | 18 | குருநாகல் |
| 03 | களுத்துறை | 11 | மன்னார் | 19 | புத்தளம் |
| 04 | கண்டி | 12 | வவுனியா | 20 | அநுராதபுரம் |
| 05 | மாத்தளை | 13 | முல்லைத்தீவு | 21 | பொலன்னறுவை |
| 06 | நுவரெலியா | 14 | கிளிநொச்சி | 22 | பதுளை |
| 07 | காலி | 15 | மட்டக்களப்பு | 23 | மொனராகலை |
| 08 | மாத்தறை | 16 | அம்பாறை | 24 | இரத்தினபுரி |
| | | | | 25 | கேகாலை |

3.3 உரிய மாதிரிப் படிவத்திற்கு ஒவ்வாத விண்ணப்பப்படிவங்களும் முழுமையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப்படிவங்களும் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். தாங்கள் சமர்ப்பிக்கும் விண்ணப்பப்படிவத்தின் போட்டோப் பிரதியை வைத்திருப்பது பயன்மிக்கதாகும்.

3.4 சரியாகப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2008.09.30 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் ''பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை'' என்ற முகவரிக்கு கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டும்.

3.5 தபாலில் காணாமற் போதல் அல்லது தாமதித்துக் கிடைக்கும் விண்ணப்பப்படிவங்கள் தொடர்பான எந்தவித முறைப்பாடுகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

3.6 கல்வி அமைச்சு அல்லது மாகாணக் கல்வித் திணைக்களம்/வலயக் கல்வி அலுவலகத்தின் உத்தியோகத்தர்களின் தனிப்பட்ட பெயர்களுக்கு அனுப்பப்படும் விண்ணப்பப்படிவங்கள் எதுவும் கருத்திற்கொள்ளப்படமாட்டாது.

3.7 விண்ணப்பப்படிவத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "தேசிய மற்றும் மாகாணப் பாடசாலைகளுக்காக இலங்கை ஆசிரிய சேவைக்கு மௌலவி ஆசிரியர்களை சேர்த்துக்கொள்ளல் - 2008/2009" எனக் குறிப்பிட்டிருக்க வேண்டும். மாகாணப் பாடசாலைகளுக்கு விண்ணப்பிப்பதாயின் உரிய மாவட்டத்தைக் குறிப்பிடவும்.

4. **பரீட்சை மத்திய நிலையம் :**

4.1 எழுத்து மூலப் பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூலம் கீழ்க் குறிப்பிடப்பட்ட நகரங்களில் மாத்திரம் நடைபெறும். உரிய பரீட்சை நடாத்தப்படும் தினம் மற்றும் மத்திய நிலையம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பின்னர் அறிவிக்கப்படும்.

| பரீட்சை நடைபெறும் நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| கொழும்பு | 1 |
| மாத்தறை | 2 |
| கல்முனை | 3 |
| கண்டி | 4 |

4.2 விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சைக்கான அனுமதி அட்டை அனுப்பப்பட்டவுடன் அது தொடர்பாகக் குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்தல் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் பிரசுரிக்கப்படும். இவ்வறிவித்தல் பிரசுரமாகி 02 அல்லது 03 நாட்கள் கடந்த பின்பு பரீட்சைக்கான அனுமதி அட்டை கிடைக்காத பட்சத்தில் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிக்க வேண்டும். தாங்கள் வைத்துக் கொண்ட விண்ணப்பப்படிவத்தின் மற்றும் பணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டின் உறுதி செய்யப்பட்ட போட்டோப் பிரதிகள், பதிவு செய்த பற்றுச்சீட்டையும் கொழும்புக்கு வெளியேயாயின் அனுமதி அட்டையை அனுப்புவதற்கான பெக்ஸ் இலக்கத்தையும் குறிப்பிட்டு தங்களது கோரிக்கைக் கடிதத்துடன் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிப்பது பயன்மிக்கதாகும்.

5. **பரீட்சை அறிவித்தல்.**- பரீட்சை மண்டப பொறுப்பாளருக்கு தமது ஒப்பம் உறுதி செய்யப்பட்ட பரீட்சை அனுமதிப்பத்திரத்தை சமர்ப்பித்து பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். பரீட்சை அனுமதிப்பத்திரம் இன்றி பரீட்சைக்குத் தோற்ற சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது.

6. **பரீட்சைக் கட்டணம்.**- பரீட்சைக் கட்டணம் ரூ. 300 ஆகும். தலைப்பு இலக்கம் 4000-20-03-20-13 இன் கீழ் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் பெயருக்கு மாவட்ட/பிரதேச செயலக அலுவலகத்தில் நிதி செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தின் உரிய கூட்டினுள் ஒட்டி பற்றுச்சீட்டின் இலக்கத்தையும் குறிப்பிடுக. பற்றுச்சீட்டின் போட்டோப் பிரதியை வைத்திருப்பது பயன்மிக்கதாகும்.

7. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் பரீட்சைகளின் போது பரீட்சார்த்தியின் அடையாளத்தை பரீட்சை மண்டபப் பொறுப்பாளருக்கு உறுதி செய்வதற்காக அங்கீகரிக்கப்பட்ட ஆவணமாகக் கருதப்படுவது ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை அல்லது வெளிநாட்டு கடவுச்சீட்டு மாத்திரம் ஆகும்.

8. பரீட்சார்த்திக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்படுவதானது அவர் பரீட்சைக்குத் தோற்ற தகைமை கொண்டவர் என்று ஏற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்படமாட்டாது.

9. பரீட்சையை நடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்குகளுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்பட வேண்டும். அச்சட்ட ஒழுங்குகளை மீறும் பட்சத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைகளுக்கும் உட்படவேண்டியேற்படும்.

10. **பரீட்சை ஒழுங்கு முறைகள்.**- பரீட்சை கீழ்க் குறிப்பிடப்பட்டவாறு இரண்டு வினாத்தாள்களைக் கொண்டதாக அமையும். இரண்டு வினாப்பத்திரங்களும் பல்தேர்வு மற்றும் சுருக்கமாக விடை எதிர்பார்க்கும் கேள்விகளாகும் :-

(1) உளச்சார்புப் பரீட்சை - நேரம் : 1 மணித்தியாலம் -100 புள்ளிகள்
பரீட்சார்த்தியின் மொழி அறிவு, விவாதிக்கும் திறன், கணிதத்திறன் போன்றனவற்றை பரிசீலனை செய்யக்கூடிய வகையில் இவ்வினாப்பத்திரம் அமையும்.

*2. பொது அறிவு :* நேரம் : 1 மணித்தியாலம் –100 புள்ளிகள்

பொருளாதாரம், அரசியல், கல்வி கலாச்சாரம் மற்றும் சமூகவியல், விஞ்ஞானம், விளையாட்டுத் தொடர்பாக உள்நாட்டு வெளிநாட்டு ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் தொடர்பாக பரீட்சார்த்தியின் அறிவை மதிப்பீடு செய்யும் வகையில் இவ்வினாப்பத்திரம் அமையும்.

11. **தேர்ந்தெடுக்கும் முறை**.– (1) மாகாணப் பாடசாலைகளுக்காக அவ்வவ் மாவட்டங்களில் காணப்படும் வெற்றிடங்களுக்கமைய விண்ணப்பித்த அம்மாவட்டங்களிலேயே வதியும் விண்ணப்பதாரர்களிடமிருந்து போட்டிப் பரீட்சையில் கூடுதலான புள்ளிகளைப் பெறும் 410 விண்ணப்பதாரர்கள் இரண்டு கட்டங்களின் கீழ் தேர்ந்தெடுக்கப்படும்.

(2) தேசிய பாடசாலைகளுக்காக அவ்வவ் மாவட்டங்களில் காணப்படும் வெற்றிடங்களுக்கமைய விண்ணப்பித்த அம்மாவட்டத்தை வதிவிடமாகக் கொண்ட விண்ணப்பதாரர்களில் போட்டிப் பரீட்சையின் மூலம் கூடுதலான புள்ளிகளைப் பெற்ற 14 விண்ணப்பதாரர்கள் 02 கட்டங்களின் கீழ் தேர்ந்தெடுக்கப்படும் –

தேசிய மற்றும் மாகாணப் பாடசாலைகளுக்காக இரண்டு கட்டங்களின் கீழ் மௌலவி ஆசிரியர்கள் சேர்த்துக்கொள்ளப்படும் எண்ணிக்கை கீழே குறிப்பிடப்பட்டுள்ளது:

| | | 2008 | | 2009 | | | தேசிய பாடசாலை 2008 | | தேசிய பாடசாலை 2009 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மாகாணம் | மாவட்டம் | தமிழ் மூலம் | சிங்களம் மூலம் | தமிழ் மூலம் | சிங்களம் மூலம் | | தமிழ் மூலம் | சிங்களம் மூலம் | தமிழ் மூலம் | சிங்களம் மூலம் |
| மேல் | கொழும்பு | 03 | 03 | 03 | 03 | 12 | | 01 | | 01 |
| | கம்பஹா | 03 | | 03 | | 06 | | | | |
| | களுத்துறை | 03 | 02 | 03 | 02 | 10 | | | | |
| | | 09 | 05 | 09 | 05 | 28 | | | | |
| தென் | காலி | 03 | 02 | 03 | | 08 | 01 | | | 01 |
| | மாத்தறை | 04 | | 04 | 01 | 09 | | | | |
| | ஹம்பாந்தோட்டை | 03 | | 03 | 01 | 07 | | | | |
| | | 10 | 02 | 10 | 02 | 24 | | | | |
| மத்திய | கண்டி | 17 | 02 | 17 | 02 | 38 | 01 | | | |
| | மாத்தளை | 07 | | 07 | | 14 | | | 01 | |
| | நுவரெலியா | 01 | | 01 | | 02 | | | | |
| | | 25 | 02 | 25 | 02 | 54 | | | | |
| கிழக்கு | அம்பாறை | 30 | | 30 | | 60 | 01 | | 01 | |
| | மட்டக்களப்பு | 15 | | 15 | | 30 | 01 | | | |
| | திருகோணமலை | 20 | | 20 | | 40 | | | 01 | |
| | | 65 | | 65 | | 130 | | | | |
| வடமேல் | குருநாகல் | 24 | 01 | 24 | 01 | 50 | 01 | 01 | 01 | |
| | புத்தளம் | 13 | | 13 | | 26 | | | 01 | |
| | | 37 | 01 | 37 | 01 | 76 | | | | |
| வடமத்தி | அனுராதபுரம் | 18 | | 18 | | 36 | | | | |
| | பொலன்னறுவை | 04 | | 04 | | 08 | | | | |
| | | 22 | | 22 | | 44 | | | | |
| சபரகமுவ | கேகாலை | 11 | 01 | 11 | | 23 | | | | |
| | இரத்தினபுரி | 03 | | 03 | 01 | 07 | | | | |
| | | 14 | 01 | 14 | 01 | 30 | | | | |
| ஊவா | பதுளை | 04 | | 04 | | 08 | | | | |
| | மொனராகலை | 02 | | 02 | | 04 | | | | |
| | | 06 | | 06 | | 12 | | | | |
| வடக்கு | வவுனியா | 03 | | 04 | | 07 | | | | |
| | மன்னார் | 02 | | 02 | | 04 | | | | |
| | யாழ்ப்பாணம் | 01 | | | | 01 | | | | |
| | | 06 | | 06 | | 12 | | | | |
| மொத்தம் | | 194 | 11 | 194 | 11 | 410 | 05 | 02 | 05 | 02 |
| முழு மொத்தம் | | | | | 424 | | | | | |

**12. விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்வதற்கான ஆலோசனைகள் :**

12.1 அலுவலகப் பயன்பாட்டிற்கான உரிய கூட்டினை பரீட்சைத் திணைக்களத்தின் தேவைக்காக வெற்றிடமாக வைக்கவும்.

12.2 விண்ணப்பிக்கும் மாவட்டம் எக் காரணம் கொண்டும் மாற்றியமைக்கப்படமாட்டாது. அது தொடர்பாக பின்னர் சமர்ப்பிக்கப்படும் மேன்முறையீடுகள் தொடர்பாகவும் கருத்திற் கொள்ளப்படமாட்டாது. அத்துடன் ஒரு பரீட்சார்த்திக்கு ஒரு விண்ணப்பப்படிவத்தை மாத்திரமே சமர்ப்பிக்க முடியும்.

13. இவ்வறிவித்தலுக்குட்படாத ஏதாவதொரு விடயம் இருப்பின் அது தொடர்பாக தீர்மானம் எடுக்கும் உரிமையும் ஏதாவதொரு வெற்றிடத்தின் ஒரு பகுதி அல்லது முழுமையாக நிரப்ப அல்லது நிரப்பாதிருப்பது தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுக்கும் உரிமை கல்வி அமைச்சின் செயலாளருக்குரியதாகும்.

எம். எம். என். டி. பண்டார,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

மாதிரி விண்ணப்பப் படிவம்

அலுவலக உபயோகத்திற்காக

**தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளில் காணப்படும் வெற்றிடங்களுக்காக இலங்கை ஆசிரிய சேவைக்கு மௌலவி ஆசிரியர்களை சேர்த்துக் கொள்வதற்கான போட்டிப் பரீட்சை - 2008/2009**

**Competitive Examination for recruitment of Moulavi Teachers to the Sri Lanka Teachers Service for the vacancies existing in National and Provincial Schools – 2008/ 2009**

பரீட்சைக்குத் தோற்றும் மொழி :

சிங்களம் - 02
தமிழ் - 03

(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

பரீட்சைக்குத் தோற்றும் நகரம் மற்றும் நகர இலக்கம் நகரம் நகர இல.

(நகரத்தை ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில் குறிப்பிடுக. நகர இலக்கம் அறிவித்தலில் 4.1 இல் குறிப்பிடப்பட்டுள்ளது)

வதியும் மாவட்டம் இலக்கம்
(அறிவித்தலின் 2-2 ஐப் பார்க்கவும்)

(அறிவித்தலின் 3.2 இன் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணைக்கமைய பூர்த்தி செய்யவும்)

01. 1.1 முதலெழுத்துக்களை இறுதியில் குறிப்பிட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) உ-ம் : NAZEER A.B :-----.

1.2 முதலெழுத்துக்களினால் குறித்துக்காட்டப்படும் பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) :-----.

02. 2.1 தற்போதைய முகவரி (ஆங்கில கெப்பிற்றில் எழுத்தில்) :-----.
(அனுமதிப்பத்திரம் இந்த முகவரிக்கு தபாலில் இடப்படும்)

03. 3.1 பால் : ஆண் -0 பெண் -1 [ ]

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் குறிப்பிடுக.)

3.2 திருமணமானவர்/திருமணமாகாதவர் (திருமணமானவர் -1 திருமணமாகாதவர் -2)
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் குறிப்பிடுக.)

3.3 தேசிய அடையாள அட்டை இல. :- [ | | | | | | | | | ]

4. விண்ணப்பிக்கும் பாடசாலை வகை [ ]

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் குறிப்பிடுக.)

(தேசிய பாடசாலை -1
மாகாணப் பாடசாலை -2
தேசிய மற்றும் மாகாணப் பாடசாலை இரண்டுக்கும் -3)

5. 5.1 பிறந்த திகதி : வருடம் [ | | | ] மாதம் : [ | ] திகதி : [ | ]

5.2 2008.09.30 ஆந் திகதியன்று வயது வருடங்கள் : [ | ] மாதங்கள்: [ | ] நாட்கள் : [ | ]

6. 6.1 செலுத்தப்பட்டுள்ள பரீட்சைக் கட்டணம் (எழுத்து மூலம்) :------.
6.2 பற்றுச்சீட்டு இலக்கம் :------.
6.3 வெளியீட்டு அலுவலகம் :------.
6.4 திகதி :------.

| பற்றுச்சீட்டின் போட்டோப் பிரதியை தாங்கள் வைத்துக் கொண்டு பற்றுச்சீட்டை களராது இங்கே ஒட்டவும் |
|---|

**7. விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவு மற்றும் நம்பிக்கைக்கு எட்டிய வகையில் உண்மையானது என உறுதி மொழிகின்றேன். இப்பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டதன் பின்னர் தகைமை அற்றவர் எனத் தெரியவரும் பட்சத்தில் என்னை சேவையிலிருந்து நீக்கவும் உடன்படுகின்றேன். மேலும் பரீட்சை தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்குகளுக்குக் கட்டுப்படுவதாகவும் இத்தால் உறுதியுரைகின்றேன்.

.........
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :------.

8. (தற்பொழுது சேவையில் இருப்பவர்களுக்கு மாத்திரம்)

**திணைக்கள /நிறுவனத் தலைவரின் விதப்புரை**

திரு./திருமதி/செல்வி ................... எனது திணைக்களத்தில் /நிறுவனத்தில் சேவையாற்றுவதாகவும் ..... திகதியன்று அண்மித்த 05 வருட காலத்திற்குள் எச்சரிக்கை தவிர/எந்தவித தண்டனைகளுக்கும் உட்படவில்லையென்றும், இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் சரியானதென்றும் உரிய பதவிக்காக இவர் தேர்ந்தெடுக்கப்படும் பட்சத்தில் உடனடியாக விடுவிக்க முடியும் என்றும் இத்தால் உறுதி செய்கிறேன்.

.........
திணைக்களத் தலைவரின் கையொப்பமும் பதவியும்.

திகதி :------.

8-1103

## நிதி, திட்டமிடல் அமைச்சு

### இலங்கை திட்டமிடல் சேவை நடைமுறையில் உள்ள அமைச்சு/ திணைக்களங்களில் திட்டமிடல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களை இலங்கை திட்டமிடல் சேவையின் II ஆம் வகுப்பு II ஆந் தரத்திற்கு (மிகை ஆளணி அடிப்படையில்) நியமிப்பது தொடர்பில் கவனத்திற் கொள்வதற்காக விண்ணப்பங்களைக் கோரல்

இலங்கை திட்டமிடல் சேவையின் II ஆம் வகுப்பு II ஆந் தரத்திற்கு (மிகை ஆளணி அடிப்படையில்) நியமிப்பது தொடர்பில் கவனத்திற் கொள்வதற்காக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் கொழும்பில் 2008, நவெம்பர் மாதத்தில் நடாத்தப்படும் பரீட்சைக்கு இலங்கை திட்டமிடல் சேவை நடைமுறையில் உள்ள அமைச்சு/திணைக்களங்களில் திட்டமிடல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள கீழ்க்காணும் உத்தியோகத்தர்களிடமிருந்து அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமப்படி இத்தால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

*2.* **தேவையான தகைமைகள்.**- 2005.05.30 ஆந் திகதி தொடக்கம் அமுலுக்கு வரும் இலங்கை திட்டமிடல் சேவை விதிக்கோவையின் "உ" இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் சம்பள அளவுகளைக் கொண்ட (அ. நி. சு. 6/2006) சேவைகளில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் மட்டும் இதற்கு விண்ணப்பிக்கலாம் :-

(அ) திட்ட அமுலாக்கல் உத்தியோகத்தர்கள் : எம்என்-5- ரூபா 15,785-10 X 290-15 X 325-11 X 400- ரூபா 27,960

(ஆ) அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் : எம்என்-5- ரூபா 14,850-10 X 185-4 X 210-15 X 290-7 X 320- ரூபா 24,130

(இ) புள்ளிவிபர உதவியாளர்கள் (நிதி, திட்டமிடல் விடயப் பொறுப்பு அமைச்சு) : எம்என்-5- ரூபா 14,850-10 X 185-4 X 210-15 X 290-7 X 320- ரூபா 24,130

(ஈ) தொழில் முயற்சி அபிவிருத்தி பயிற்சி உத்தியோகத்தர்கள் (இளைஞர் விவகார, விளையாட்டுத்துறை அமைச்சு) : எம்என்-5-ரூபா 15,785-10 X 290-15 X 325-11 X 400- ரூபா 27,960

(உ) கருத்திட்ட உத்தியோகத்தர்கள் (திட்ட அமுலாக்கல் அமைச்சு) : எம்என்-5- ரூபா 15,785-10 X 290-15 X 325-11 X 400- ரூபா 27,960

(ஊ) அபிவிருத்தி உதவியாளர்கள் (திட்ட அமுலாக்கல் அமைச்சு) : எம்என்-5- ரூபா 14,850-10 X 185-4 X 210-15 X 290-7 X 320- ரூபா 24,130

**தேவையான தகைமைகள்.**- (அ) 2007, சனவரி 01 ஆந் திகதியன்று மேலே காண்பிக்கப் பட்டுள்ள பதவியொன்றில் 5 வருடங்களுக்கு குறையாத தொடர்ச்சியானதும் திருப்திகரமானதுமான நிரந்தர சேவைக்காலம் இருத்தல் ;

(ஆ) மேலே பதவியொன்றில் நியமனம் நிரந்தரமாக்கப்பட்டிருத்தல் ;

(இ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டம் பெற்றிருத்தல் ;

(ஈ) விண்ணப்பதாரர்கள் கோரப்படுமிடத்து பின்வரும் ஆவணங் களைச் சமர்ப்பிக்க ஆயத்தமாக இருத்தல் வேண்டும் :

(i) பிறப்புச் சான்றிதழ் ;
(ii) பட்ட அல்லது பட்டப்பின்படிப்பு சான்றிதழ் அல்லது சான்றிதழ்கள் (தகைமைபெற்ற சான்றிதழ்) ;
(iii) சிங்களம், தமிழ், ஆங்கில மொழிகளில் சித்தியெய்திய அதியுயர் பரீட்சைச் சான்றிதழ்.

**கவனிக்க.**- விண்ணப்பப்படிவத்துடன் எந்தவொரு ஆவணமொன்று அல்லது பிரதியொன்று (பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு தவிர்ந்த) இணைக்கப்படக் கூடாது.

*3.* **சேவையில் அமர்த்துவதற்கான நியதிகள் மற்றும் சேவை நிபந்தனைகள்.**- திட்டமிடல் சேவையின் II ஆம் வகுப்பு II ஆந் தரத்திற்கு மிகை ஆளணி அடிப்படையில் பரீட்சையின் பெறுபேறுகளின்படி 40 புள்ளிகளைவிடக் கூடுதலாக பெற்றுக்கொண்டவர்களுக்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமனம் வழங்கப்படும்.

மிகை ஆளணி சம்பந்தமான நிபந்தனைகள் கீழே காண்பிக்கப் பட்டுள்ளது :

(i) இப்பதவி நிரந்தரமானது, ஓய்வூதியம் கொண்டது. விதவை, அனாதைகள் பங்களிப்பு நிதியத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

(ii) அட்டவணைப்படுத்தப்பட்ட பதவிகளுக்கு வழங்கப்பட்டுள்ள சலுகைகள் போன்றவை இல்லாமல், செலுத்தப்படும் சம்பளத்தில் இருந்து மட்டும் அவர்கள் திருப்திப்படுதல் வேண்டும்.

(iii) திட்டமிடல் சேவையின் சகல உத்தியோகத்தர்களும் முதலாவது வினைத்திறமைகாண் தடையில் சித்தியெய்தல் வேண்டும். இந்த வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை பின்வரும் விடயங்களைக் கொண்டதாகும் :-

(அ) திட்டமிடல் சங்கற்பங்கள் மற்றும் விதி நுட்பங்கள், திட்டமிடல் நிறுவனம், நிதி மற்றும் நிருவாகம்
(ஆ) பொருளாதார பகுப்பாய்வு மற்றும் கணக்கிடல்
(இ) கருத்திட்டங்களைத் திட்டமிடல்
(ஈ) ஆங்கில மொழி

(இது பற்றிய முழு விபரம் 2000.05.30 ஆந் திகதியுடைய இலக்கம் 1134/5 கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ள இலங்கை திட்டமிடல் சேவையின் ஒழுங்குவிதிகளின் 'இ' பிரிவில் காண்பிக்கப்பட்டுள்ளது.)

(iv) நிரந்தர பதவியொன்றை வகிப்பதற்கு தகைமை பெறுவதற் கெனின் இலங்கை திட்டமிடல் சேவையின் ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கு அமைவாக செய்யப்படும் பதவியுயர்வு/ ஆட்சேர்ப்பு பரீட்சைக்கு தோற்றி சித்தி பெறுதல் வேண்டும்.

(v) தமக்கென தனிப்பட்டதாக மிகையணி அடிப்படையில் உரித்துடைய பதவியை வகித்தல் வேண்டும்.

(vi) இதன் பிரகாரம் இலங்கைத் திட்டமிடல் சேவை ஒழுங்குவிதிகளின் 'உ' பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டபின் அந்த வெற்றிடங்களுக்கு சமமான எண்ணிக்கையொன்று இலங்கை திட்டமிடல் சேவை ஒழுங்குவிதிகளின் 'உ' பிரிவில் உரித்துடைய சேவைகளில் இருந்து நீக்கப்படும்.

*4.* **கட்டமைப்பு மற்றும் மாதாந்த சம்பள அளவு (அ. நி. சு. இலக்கம் 6/2006 இன்படி).**- மாதாந்த சம்பள அளவு.- ரூபா 22,935-10X645- 8X790-17X1,050- ரூபா 53,555 (மாதாந்த சம்பளம் ரூபா 24,225 க்கு முன்னர் முதலாம் வினைத்திறமைகாண் தடை மற்றும்

ரூபா 28,095 இற்கு முன்னர் இரண்டாம் வினைத்திறமைகாண் தடை பரீட்சை நடைபெறும்)

*I ஆம் வகுப்பின் ஆரம்ப மாதாந்த சம்பளம்: ரூ. 36,755*
*II ஆம் வகுப்பின் ஆரம்ப மாதாந்த சம்பளம் (இ. தி. சே. II ஆம் வகுப்பு I ஆந் தரம்) : ரூ. 30,175*
*III ஆம் வகுப்பின் ஆரம்ப மாதாந்த சம்பளம்: (இ. தி. சே. II ஆம் வகுப்பு II ஆந் தரம்) – ரூ. 22,935*

5. **விண்ணப்பப்படிவமும் பரீட்சைக் கட்டணமும்**.- (அ) இப்பரீட்சைக்கான பரீட்சைக் கட்டணம் ரூ. 300 ஆகும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிக்கு முன்னர் வருமானத் தலைப்பு 4000-20-03-20-13 இற்கு வரவு வைக்கப்படும் விதத்தில் மாவட்ட செயலகத்திற்கு அல்லது பிரதேச செயலகத்திற்கு பணம் செலுத்தி பெற்றுக்கொள்ளப்படும் பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தின் இரண்டாம் பக்கத்தில் மேல் மூலையில் ஒட்டப்படல் வேண்டும். (இப்பரீட்சைக் கட்டணம் மீளச் செலுத்தப்பட மாட்டாது.) உரிய திகதிக்குப் பின்னர் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் அறிவிக்கப்படாமல் நிராகரிக்கப்படும்.

பணம் செலுத்தி பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டின் போட்டோ பிரதியொன்று உங்களிடம் பாதுகாப்பாக வைத்துக்கொள்ளவும்.

(ஆ) விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்பட மாட்டாது. விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பிரவேசப்பத்திரம் அனுப்பிவைக்கப்படும். பரீட்சை பிரவேசப்பத்திரம் அனுப்பிவைக்கப்பட்டதுடன் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சைத் திகதி அறிவிக்கப்பட்டு பத்திரிகை அறிவித்தலொன்று வெளியிடப்படும். பரீட்சைக்கு உரிய திகதிக்கு 7 நாட்களுக்கு முன்னர் பிரவேசப்பத்திரங்கள் கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரர்கள், ''பெலவத்த, பத்தரமுல்ல'' முகவரிக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு கீழ்க்காணும் விபரங்கள் தரப்படல் வேண்டும் :

(i) பரீட்சையின் பெயர் ;
(ii) விண்ணப்பதாரியின் முழுப்பெயர் ;
(iii) முகவரி ;
(iv) விண்ணப்பப்படிவம் தபாலில் இடப்பட்ட திகதி, தபால் அலுவலகம், பதிவுசெய்யப்பட்ட இலக்கம் ;
(v) பணம் செலுத்திய திகதி, இடம் மற்றும் பற்றுச்சீட்டு இலக்கம்.

6. **பரீட்சைக்கு தோற்றுதல்**.- (அ) விண்ணப்பதாரரொருவர் தமக்கு நியமிக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். பரீட்சைக்குத் தோற்றும் தினத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனுப்பப்பட்ட பரீட்சை அனுமதி அட்டையைத் தங்களது கையொப்பத்தை உறுதிப்படுத்தி பரீட்சை மண்டப தலைவருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். பரீட்சை கொழும்பில் நடாத்தப்படுவதுடன், பரீட்சைக்கு சமுகமளிப்பதற்கான போக்குவரத்து கட்டணம், உணவுப் படிக்கு உரிமை கிடையாது.

**குறிப்பு**.- விண்ணப்பதாரரொருவருக்கு பரீட்சைக்கு சமுகமளிப்ப தற்காக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டை வழங்கப்படுதலானது, அவரால் பரீட்சைக்குச் சமுகமளிப்பதற்குத் தேவையான தகைமைகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளதென ஏற்றுக்கொள் ளப்பட்டதாகக் கவனத்திற்கொள்ளக் கூடாது.

7. **விண்ணப்பிக்க வேண்டிய முறை**.- (அ) இந்த அறிவித்தலின் இறுதியில் காண்பிக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் 21X29 செ. மீ (ஏ4) அளவிலான தாளில் இரு பக்கமும் பயன்படுத்தப்பட்டு விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்பட வேண்டும். 01 தொடக்கம் 08 வரையிலான பிரிவுகள் முதலாம் பக்கத்தில் உட்சேர்க்கப்படும் விதத்தில் விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்படல் வேண்டும்.

(ஆ) பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் 2008.09.26 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக ''பரீட்சை ஆணையாளர் நாயகம், பெலவத்தை, பத்தரமுல்லை'' இற்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவம் இடப்படும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் 'திட்டமிடல் சேவைக்கு (மிகை ஆளணி அடிப்படையில்) ஆட்சேர்ப்புச் செய்யும் வரையறுத்த போட்டிப் பரீட்சை' என தெளிவாக எழுதப்பட வேண்டும்.

(இ) உத்தியோகத்தர்கள் தங்களது விண்ணப்பப்படிவங்களை தங்களது நிறுவனத் தலைவரின் ஊடாக உரிய திகதிக்கு முன்னர் சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஈ) விண்ணப்பப்படிவங்கள் தயாரிக்கப்படுதல் தாம் பரீட்சைக்குத் தோற்றும் மொழியில் ஆகும்.

(உ) உரித்துடைய மாதிரிக்கு அமைவாக இல்லாத, பூரணமில்லாத, அதேபோன்று தாமதமாக கிடைக்கும் விண்ணப்பங்கள் எந்த ஒரு அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் தபாலில் காணாமல் போனதாகவோ அல்லது தாமதம் பற்றிச் செய்யப்படும் முறைப்பாடுகள் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.

8. **விண்ணப்பதாரியின் ஆளடையாளம்**.- தாம் தோற்றும் சகல விடயம் சம்பந்தமாகவும் பரீட்சை மண்டப அதிபர் திருப்தியுறும் வகையில் விண்ணப்பதாரர் ஒருவர் பரீட்சை மண்டபத்தில் தமது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். இதற்கென கீழ்க்காணும் ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் :-

(i) ஆட்பதிவு ஆணையாளரினால் வழங்கப்பட்ட அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் வெளிநாட்டு கடவுச்சீட்டு (பரீட்சைத் திகதிக்கு 3 வருடங்களுக்கு முன்னர் வழங்கப்பட்டதல்லாத).

9. **பிழையான தகவல்கள் வழங்குதல்**.- இப்பரீட்சைக்கு தோற்றுவதற்காக யாரேனும் விண்ணப்பதாரியொருவருக்கு தகைமைகள் இல்லை எனத் தெரியவந்தால் பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடாத்தப்படும் சந்தர்ப்பத்தில் அல்லது பரீட்சைக்குப் பின்னர் அல்லது எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவரது பரீட்சார்த்தித் தன்மை நிராகரிக்கப்படுவதற்கு இடமுண்டு. விண்ணப்பதாரி ஒருவர் சமர்ப்பித்த ஏதேனும் தகவல் ஒன்று பிழையானதென்பதை அறிந்துகொண்டே சமர்ப்பித்துள்ளார் எனத் தெரியவந்தால் அவர் சேவையில் இருந்து விலக்கப்பட இடமுண்டு. இந்த வர்த்தமானிப் பத்திரிகையின் பகுதி I : தொகுதி (IIஅ) வின் ஆரம்பத்தில் வெளியிடப்பட்ட பரீட்சை விண்ணப்பதாரிகளுக்கான சட்டமும் அறிவுரைகளும் பின்பற்றப்பட வேண்டும்.

*10.* **மொழி**.- இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும்.

(அ) விண்ணப்பதாரர் ஒருவர் விரும்பிய மொழியில் பரீட்சைக்குத் தோற்றமுடியும்.

(ஆ) விண்ணப்பதாரர் ஒருவர் ஒரு மொழியில் மட்டுமே பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.

(இ) பரீட்சையின்போது மொழி மாற்றத்திற்கு அனுமதி அளிக்கப்பட மாட்டாது.

*11.* **பரீட்சை முறை** :

பகுதி (அ) :

(i) "கொள்கை அமுலாக்கல் மற்றும் கருத்திட்ட மதிப்பீடு" எனும் 2 மணித்தியால வினாப்பத்திரம் - 100 புள்ளிகள்

பகுதி (ஆ) :
நேர்முகப் பரீட்சை (இதற்குப் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.)

*12.* **பாடத்திட்டம்** :

*கொள்கை அமுலாக்கல் மற்றும் கருத்திட்ட மதிப்பீடு.*- இவ்வினாப்பத்திரத்தின் நோக்கமானது, திட்டமிடல் மூலதர்மங்கள் மற்றும் திட்டமிடல் உபாய முறைகள் பற்றி விண்ணப்பதாரிகளின் ஆரம்ப அறிவை பரீட்சித்தல் மற்றும் அபிவிருத்திக் கருத்திட்டங்களை கண்டறிதல், தயாரித்தல், மதிப்பீடு செய்தல், விபரங்களை வைத்துக்கொள்ளல் மற்றும் மதிப்பிடல் பற்றிய அவர்களது அறிவையும் அனுபவத்தையும் மதிப்பிடலாகும்.

*13.* **தெரிவுசெய்யும் முறை**.- (i) வினாப்பத்திரத்திற்குரிய புள்ளிகளில் ஆகக்குறைந்தது 40% ஆவது பெற்றுக்கொள்ளாத விண்ணப்பதாரிகள் அழைக்கப்பட தகுதிபெற மாட்டார்கள். நியமிக்கப்படுவதற்கு விண்ணப்பதாரிகள் தெரிவுசெய்யப்படுவதானது பரீட்சையின் 40% இற்கு கூடுதலான புள்ளிகளைப் பெற்றுக்கொண்டவர்களின் இடையிலாகும்.

*14.* இந்த அறிவித்தலில் குறிப்பிடப்படாத ஏதேனும் விடயமொன்று பற்றிய சிக்கல்கள் எழும் பட்சத்தில் அதுபற்றியும், பரீட்சை மூலம் ஆட்சேர்ப்பு செய்யப்படவேண்டிய விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை சம்பந்தமாகவும், அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானமொன்று எடுக்கப்படுவதுடன், அதுவே இறுதித் தீர்மானமாகும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

பீ. பி. ஜயசுந்தர,
செயலாளர்,
நிதி, திட்டமிடல் அமைச்சு.

நிதி, திட்டமிடல் அமைச்சு,
கொழும்பு 01,
21.08.2008.

மாதிரி விண்ணப்பப்படிவம்

நிதி, திட்டமிடல் அமைச்சு

*இலங்கை திட்டமிடல் சேவை நடைமுறையில் உள்ள அமைச்சு/ திணைக்களங்களில் திட்டமிடல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களை இலங்கை திட்டமிடல் சேவையின் II ஆம் வகுப்பு II ஆந் தரத்திற்கு (மிகை ஆளணி) ஆட்சேர்ப்புச் செய்வதற்கான வரையறுத்த போட்டிப் பரீட்சை – 2008*

☐
(அலுவலக உபயோகத்துக்கு மட்டும்)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :

(சிங்களம்-2, தமிழ்-3, ஆங்கிலம்-4) ☐
(உரித்துடைய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக.)

1. (i) முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.
உ+ம் : Mr./ Mrs./ Miss : Silva, A. L.
(ii) முதலெழுத்துக்களுக்குரிய பெயர்கள் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.

2. அனுமதி அட்டை அனுப்பவேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :-

(i) தனிப்பட்ட :----.
(ii) உத்தியோக :----.

3. பால் : பெண்-1
ஆண்-0 ☐
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக.)

4. (i) பிறந்த திகதி :-

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

5. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :
☐☐☐☐☐☐☐☐☐☐

6. இனம் : ☐
(இனத்திற்குரிய இலக்கத்தினை கூட்டினுள் எழுதுக.)

| | |
|---|---|
| சிங்களம் | - 1 |
| இலங்கைத் தமிழர் | - 2 |
| இந்தியத் தமிழர் | - 3 |
| முஸ்லிம் | - 4 |
| பிற | - 5 |

7. (i) இரண்டாம் பந்தியின்கீழ் இந்தப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகுதியானவராக ஆவதற்கு பெற்றுக்கொண்ட தகைமைகள் :-

| அமை./ மாகா.ச./ திணை. நிறுவனத் தின் பெயர் | வகித்த பதவி | காலம் | | வருடாந்த சம்பளம் |
|---|---|---|---|---|
| | | தொடக்கம் | வரை | |
| | | | | |

(ii) பெற்றுக்கொண்ட உயர் கல்வித் தகைமை :-

| பட்டம்/ டிப்ளோமா பரீட்சை | ஆண்டு | விடயங்கள் | வகுப்புச் சித்தி | பல்கலைக் கழகம்/ நிறுவனம் |
|---|---|---|---|---|
| | | | | |

(iii) சித்திபெற்றுள்ள அதிஉயர் பரீட்சை :-

(அ) சிங்களத்தில் :----.
(ஆ) தமிழில் :----.
(இ) ஆங்கிலத்தில் :----.

8. (அ) நீங்கள் கடன் பட்டுள்ளீராயின் அது எவ்வளவு ? :----.
(ஆ) நீங்கள் குற்றமொன்றுக்கு நீதிமன்றத்தினால் தண்டனை விதிக்கப்பட்டுள்ளீரா ? :----.
அவ்வாறாயின் அதுபற்றிய விபரம் :----.

9. பரீட்சைக் கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொள்ளப்பட்ட (ஒட்டப் பட்டுள்ள) பற்றுச்சீட்டு :-

இலக்கம் :----.
திகதி :----.
வழங்கப்பட்ட அலுவலகம் :----.

| பற்றுச்சீட்டு ஒட்டுவதற்காக |
|---|

10. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவு மற்றும் விசுவாசத்தின் பிரகாரம் உண்மையானதும் சரியானதும் என குறிப்பிடுகின்றேன். இந்தப் பரீட்சை பற்றிய நிபந்தனைகளின்படி என்னால் பிழையான தகவல்கள் காண்பிக்கப்பட்டிருப்பின், பரீட்சைக்கு முன்னதாகவோ அல்லது பின்னதாகவோ எனது பரீட்சார்த்தி நிலை நிராகரிக்கப்படலாம் எனவும் தெரிவுசெய்யப் பட்ட பின்னர் அதுபற்றித் தெரியவந்தால் சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் அறிந்துள்ளேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

11. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**
இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ...................................................... என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிந்துள்ளேன் எனவும், அவர் எனது முன்னிலையில் .............................. ஆந் திகதி அவரது கையொப்பத்தை இட்டார் எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

----,
கையொப்பத்தை உறுதிப்படுத்தும்
உத்தியோகத்தரின் கையொப்பம்.

கையொப்பத்தை உறுதிப்படுத்தும்
உத்தியோகத்தரின் முழுப்பெயர் :----.
முகவரி/பதவி :----.
திகதி :----.

12. **திணைக்கள/நிறுவனத் தலைவரின் சான்றிதழ் :**
*(அரசாங்க/மாகாண அரசாங்க சேவையில் உள்ளோர்களுக்கு மட்டும்)*
இந்த விண்ணப்பதாரியாகிய திரு./ திருமதி/ செல்வி .............................................. இத்திணைக்களத்தில்/மாகாண சபையில்/நிறுவனத்தில் ......................... ஆந் திகதி தொடக்கம் கடமையாற்றுகிறார். அவர் நிரந்தர ஓய்வூதியம் கொண்ட/ தற்காலிக பதவியொன்றை வகிக்கின்றார். கடந்த ......................................... ஆண்டு காலமாக அவர் சம்பள உயர்வுகள் அனைத்தையும் உழைத்துள்ளார் எனவும் அவர் எந்தவித ஒழுக்காற்று தண்டனைக்கும் (எச்சரிக்கை தவிர்ந்த) உள்ளாக்கப்படவில்லை எனவும், மேலே 07 ஆம் பந்தியின்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள சகலதும் இந்த அலுவலகத்திலுள்ள அறிக்கைகளின் ஊடாக பரிசோதித்துப் பார்க்கப்பட்டுள்ள தெனவும், அவை சரியானவை எனவும் அவர் இந்தப் பதவிக்கு தெரிவுசெய்யப்பட்டால் தற்போது வகிக்கும் பதவியில் இருந்து விடுவிக்கப்படுவார் /விடுவிக்கப்பட மாட்டார் எனவும், ........................................... ஆந் திகதி எனது முன்னிலையில் கையொப்பம் இட்டார் எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறேன்.

----,
திணைக்கள/நிறுவனத் தலைவரின்
அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரின்
கையொப்பமும் உத்தியோக முத்திரையும்.

பெயர் :----.
பதவிப் பெயர் :----.
திணைக்களம்/நிறுவனம் :----.
திகதி :----.

8-1114

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.